1281
2-56
OFFICE OF THE REGISTRAR OF SOCIETIES
6 - JUN 1956
MADRAS

REGISTERED No. M. 6165. அ. 2

1281

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஜுன் 1956.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| அல்லாவின் அற்புத சாதனைகள் ... ... ... | 1 |
| திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... ... ... ... | 9 |
| இஸ்லாமிய சரித்திரச் சாரம் (T. F. R. மஆலி ஸாஹிப்-பாகவி) ... | 15 |
| நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும் ... ... ... ... | 23 |

இஸ்லாம் ஆபீஸ் :
ரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

3L
187052

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1-8-0 |
| தனிப் பிரதி | அணா. | 0-2-0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2-0-0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.


## ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் சரிதை

இதில் ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் பிறப்பும் குழந்தை பருவமும், அவர்கள் மௌலானா ரூம் அவர்களைச் சந்தித்ததும், இருவர்களுக்குமுள்ள சம்பந்தமும், ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்கள் கொலை யுண்டதும் விவரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களின் குணாதிசயங்களும், அவர்களின் உபதேசங்களும் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா. 10

கிடைக்குமிடம்:—
ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்

ஜூன்—1956.

## அல்லாஹ்வின் அற்புத சாதனைகள்

புனிதமும் பரிசுத்தமும் வாய்ந்த எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா, பிரபஞ்சத்திலுள்ள எண்ணிலடங்காத படைப்பினங்கள் எல்லாவற்றினும் மிக மேலான சிருஷ்டியாய் 'அஷ்ரபுல் மக்லூகாத்' எனும் மனித சமுதாயமாகிய நம்மனோரைப் படைத்திருக்கின்றான். இவ்வாறே, சீரிய சிறப்புப் பொருந்திய மனித இனத்திலே, நபிமார்களையும் பின்னர் ரஸூல்மார்களையும் சிரேஷ்டர்களாக்கி வைத்து, அவர்கட்கு அற்புதங்களையும் மகிமைகளையும் மாண்புகளையும் அருள் புரிந்திருக்கின்றான். இங்ஙனமே நபிமார்-ரஸூல்மார்களெல்லோரினும் மிக மிகச் சிரேஷ்டராகவும் தலைவராகவும் முதன்மையானவராகவும் தீர்க்கமானவராகவும் நமது அண்ணல் ரஹ்மத்துன் லில்ஆலமீன் ஸர்வரே காயினாத் நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்துள்ளான்.

ஹஜ்ரத் ஸையிதுனா அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் (ரிவாயத்து) அறிவிக்கிறார்கள்: ஒரு சமயம் காபிர்கள் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மீது அவதூறுகளை சுமத்தி (ஏதேதோ) குறை கூறிக் கொண்டிருந்தார்கள். இதைக் கேட்க நேரிட்ட (ஹஜ்ரத் அப்பாஸ்) அவர்கட்கு, மிகக்

கோபம் உண்டாகி விட்டது. அந்த ஆக்ரோஷத்துடனேயே, நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது திருச்சமுகத்தில் வந்து சேர்ந்தார். அப்போது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மிம்பர் (மேடை) மீது ஏறி யிருந்து, சபையினர் அனைவரையும் நோக்கி, சில அரிய விஷயங்களை எடுத்துக் கூறி, இபோபதேசம் புரிந்து கொண்டிருந்தார்கள். அதாவது:—

**நாயகம்:** ஜனங்களே! நான் யார் சொல்லுங்கள், பார்க்கலாம்.

**ஸஹாபாக்கள்:** நாயகமே! தாங்கள் அல்லாஹ்வுடைய ரஸூலாக எங்களிடம் வந்திருக்கிறீர்கள்.

**நாயகம்:** அதில் எனக்குப் பெருமையில்லை. பெருமை எதில் எனில்: நான் உங்களில் ஒருவனாக-'முஹம்மத்' என்ற பெயருடையவனாக இருக்கின்றேன். இன்னும் அப்துல்லாஹ்வுடைய மகனாகவும் அப்துல் முத்தலிப் உடைய பேரனாகவும் குறைஷ் குலத்தைச் சேர்ந்தவனாகவும் இருக்கின்றேன். ஆனால் ஆதியில், எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா, ஊர்வன-பறப்பன-இருப்பன முதலிய பொருட்களை யெல்லாம் சிருஷ்டித்தான். அத்தகைய 'மக்லூக்காத்'களில் ஐயறிவும் ஆறறிவும் பெற்ற மனித இனத்தை சிரேஷ்டமானதாகவும் உயர்வுடையதாகவும் சிருஷ்டித்து வைத்தான். அப்படிப்பட்ட 'இன்ஸான்' வர்க்கத்திற்கு என்னைத் தலைவனாக சிருஷ்டித்தான். மேலும் சிரேஷ்டச் சிருஷ்டியாகிய மனிதர்க் குலத்தையும் இறைவன் இரு வகையினராகப் பிரித்து வைத்தான். ஒன்று அரபு குலம்; மற்றொன்று அஜம் குலம். அவ்விரண்டினங்களிலே அரபு குலத்தை அஜம் குலத்தை விட உயர்வானதாக்கி, அதிலே என்னை ஆக்கி வைத்தான். இறைவன், அரபு குலத்திலேயும் சில பாகுபாடுகளை உண்டாக்கி வைத்திருக்கின்றான். அதாவது அரபு குலத்திலும் பல கபீலா (க் கோஷ்டி)கள் உண்டு. அவைகளில் சீரிய கோத்திரத்தாராகிய 'குறைஷ்' வம்சத்தில் என்னை ஜனனமாக்கி வைத்தான். அந்தக் குறைஷ் கோத்திரத்திலும் பல குடும்பங்களை உண்டாக்கினான். அந்தக் குடும்பங்களிலே 'பனு ஹாஷிம்' குடும்பம் மிகச் சிறந்தது; நான் அதிலே பிறந்தவன். ஆதலால் நான் வர்க்கத்திலும் குலத்திலும் குடும்பத்திலும், இப்படியாகவே சிறந்தவனாக இருக்கிறேன் (ஹதீது: திர்மிதி)

18052

நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவாய் மொழிந்தருளிய மேற்கண்ட வாக்கியங்களில் அரிய தத்துவங்கள் நிறைந்திருக்கின்றன. அதாவது, முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஆத்மார்த்த முறையில், அஷ்ரபுல் மக்லூகாகவும் அஷ்ரபுல் இன்ஸானாகவும் படைக்கப்பட்டிருக்கிறார்க ளென்பது வெளிப்படை. இதை இலௌகிக முறையிலும் உலகத்தோர் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமல்லவா? எனவே, முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், அரபு நாட்டுக் குலங் கோத்திர வம்சங்களில் மிகச் சிறந்த தோன்றில் ஜனனமானதே ஒரு அற்புதம் என்னும் முஃஜிஸா வாகும்.

நல்ல இனத்தில் பிறக்கவில்லை என்பதற்காக எத்தனையோ நபி மார்கள், ஜனங்களால் உல்லங்கனம் செய்யப்பட்டார்கள். நல்ல குலங் கோத்திரத்தில் பிறக்கவில்லை என்பதற்காக எத்தனையோ நபி மார்களும் தலைவர்களும், உலக சரித்திரத்தில் அவமானங்களுக்கும் அபவாதங்களுக்கும் உள்ளாகி இருக்கின்றனர். தந்தையின் பெயர் தெரியாமல் போனதாலும், தாய நல்ல சகவாசத்தில் வளராது போன தாலும் அவர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்த ஒரு சில நபிமார்கள், பற் பல பழிபாவங்களுக்கு உள்ளாகி சீர் குலைந்து போனார்கள். இப்படிப் பட்ட தோஷங்களோ அபவாதங்களோ பழி பாவங்களோ, நமது நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்களை அணுகக்கூடா தென்ப தற்காகவே, எல்லாம் வல்ல இறைவன், அப்பெருமானார் அவர்களை நாகரிக அரபு தேசத்தில், அரபு பேசும் உயர் மொழியினரில், உயர்தர குறைஷ் குலத்தில், சீர் மிகும் பனூஹாஷிம் குடும்பத்தில் ஜனன மடையச் செய்தான்.

இது மட்டுமல்ல. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் உன்னதமான குணசீலர், உத்தமமான தன்மையாளர் என்பதை இறைவன், முன் னறிவிப்பாகவே, முற்கால வேதங்களாகிய தவ்ராத், ஜபூர், இன்ஜீல் முதலிய இதிகாசங்களிலும் பிரஸ்தாபித்திருக்கின்றான். இதுவும் ஒரு நபித்துவப் பெருமையும், முஃஜிஸா என்னும் அற்புதமுமாகும். உதாரணமாக:

ஹஜ்றத் கஉப் (ரலியல்லாஹு அன்ஹு) என்ற ஸஹாபி (முஸ்லிமாவதற்கு முன்) 'யஹூதி ராஹிப்' என்னும் யூத மதப் பூசகராகவும் பாதிரியாகவும் பிரபல பூர்வ வேத சாஸ்திர விற்பன்ன

ராகவும் இருந்து வந்தவராவர். இவர் பல இதிகாசங்களை ஆராய்ச்சி செய்து பார்த்த பின், மகான் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் அற்புதப் பெருமையைப் பற்றி பொதுப்படையாய் கூறி யிருப்ப தாவது:—

"நான் யூத பாதிரி என்ற முறையில், 'தவ்ராத்' என்னும் வேதத்தை நன்ருகப் படித்துப் பொருள் உணர்ந்து ஆராய்ச்சி செய் திருக்கிறேன். அவ்வேதத்தில் "முஹம்மத் என்பவர் இறைவ னுடைய சிறந்த திருத்தூதர்" என்றும், "அவர் கர்த்தனுகிய என் னுடைய (இறைவனின்) நல் அடியார்" என்றும் எழுதப்பட்டிருக் கிறது. மேலும், முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடைய குண விசேஷங்களைப் பற்றியும் பின்வருமாறு பிரஸ்தாபிக்கப்பட்டிருக் கிறது :—

"அவர் குண சிரேஷ்டர்; முகங்கடுத்துப் பேசுபவரல்லர்; கடுமையான வசைமொழி கூறுபவரல்லர்; கடைத் தெருக்களில் போனுல் சப்தம் போட்டு இரைந்து பேசுபவரல்லர்; தீங்குச் செய்ப வனுக்கும் அவர் தீங்குச் செய்யமாட்டார்; பழிக்குப்பழி வாங்க மாட்டார்; துஷ்டனையும் மன்னித்து விடுவார்; எல்லோருடனும் தயையுடன் நடந்து கொள்வார். அவர் திருமக்கா நகரில் பிறந்து வளர்வார்; அவர் நாட்டைத் துறந்து (ஹிஜ்றத்து செய்து) போய் சேரும் புனிதஸ்தலம் "திய்பா" (என்னும் மதீனு) நகர் ஆகும். அவரது ஆட்சி ஷாம் தேசத்திலும் பரவிச் செல்லும். அவருடைய உம்மத்து-சமூகத்தினர், மிகவும் ஸ்தோத்திரம் செய்பவர்களும் வணக்க ஒழுக்க சீலர்களுமாவர். அந்த சமூகத்தினர், தமக்கு சந்தோஷம் வந்துள்ளபோதும், சஞ்சலம் வந்துற்ற காலத்திலும், அதாவது சுக-துக்கம் இரண்டிலும் இறைவனை ஒரே ரீதியில் பிரார்த்தித்து வணங்குபவர்களாவர். பிறர்க்கு உபகாரங்கள் செய் பவர்களாவர். எந்த நிலையில், எந்த இடத்தில் இருந்த போதிலும் இறைவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டே இருப்பர். தினமும் பலமுறை 'இறைவன் மகாப் பெரியவன்' (அல்லாஹு அக்பர்) என்று இரைந்து கூறிப் பிரார்த்திப்பார்கள். அந்த உம்மத்தினர், சந்திர ஓட்டத்திலும் சூரியப் போக்கிலும் கவனம் செலுத்தி, சூரிய நிலையைப் பாதுகாத்து வருவார்கள். (அதாவது, சந்திர நிலையைக் கண்டு மாதம் தேதிகளைக் கணிப்பார்கள்; சூரியனின்

போக்கைக் கொண்டு, தினம் ஐங்காலம் தொழுகை நேரங்களை கணித்துக் கொள்வார்கள். உதய காலம், உச்சநிலைக்காலம், அஸ்தமனக்காலம் ஆகியவைகளில் நன்கு கவனம் செலுத்துவார்கள்).

"இன்னும் அந்த உம்மத்து (முஸ்லிம்)கள் தொழுகை நேரம் வந்தால், முகம் கை கால்களை கழுவி சுத்தம் செய்து கொண்டு பிரார்த்தனையில் ஈடுபடுவார்கள். அங்கியோடு பூரணமான (இஜார்) கால் உறை அணிவார்கள்; இடுப்பில் கச்சையும் கட்டிக் கொண்டிருப்பார்கள்; சரீரத்தை இரண்டு வகை ஸ்நானங்களால் (ஒலுவு, குஸ்லுகளால்) பரிசுத்தமாக வைத்துக் கொள்வார்கள். அவர்களில் ஒருவர், நல்ல குரல் எழுப்பி, இறைவன் திருநாமம் சொல்லி, மகா ஜனங்களை பகிரங்கமாய் அழைப்பவராய் (பாங்கு) சொல்லும் 'முஅத்தினை' இருப்பார். இவர், வானத்துக்கும் பூமிக்கும் இடையிட்ட வெட்ட வெளியில், இறைவனின் திருநாமத்தை ஒலி எழுப்புவார். இவர் உயர்வான (மிம்பர்) மேடை மீது நின்று நாலுத்திசையிலும் ஒலிபெருக்கி அழைப்பார். பக்தி மிகுந்தவர்களான ஜனங்கள் (முஸ்லிம்கள்) வந்து கூடுவார்கள். வணக்க ஸ்தலத்தில் (பள்ளியில்) அணிவகுத்து (ஸப்பு கட்டி) நேர்மையாக நிற்பார்கள். பகலில் இரைந்தும், இரவில் அமைதியாகவும் பிரார்த்தனை செய்வார்கள். இவர்கள் இகத்திலும் பரத்திலும் ஜெயம் பெற்றவர்களா யிருப்பார்கள்." (தாரமீ, மஸாபீஹ் என்ற கிரந்தங்களில் இவ்விஷயம் இருக்கிறது.)

மேலே உள்ள நெடும் வாசகம் மூஸா நபிக்குரிய தவ்ராத் வேதத்தில் உள்ள திருக் கருத்தாகும். இதில், பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னுலேயே, உம்மத்தே முஹம்மதிய்யாவாகிய நம் முஸ்லிம்களின் இஸ்லாமிய ஒழுக்காசாரமும் பழக்க வழக்கங்களும் பிரார்த்தனை விதங்களும் சமிக்ஞையாகவும் துலக்கமாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

எனவே, இதுவும் நமது நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு, இறைவன் அருள்பாலித்த அற்புத முஃஜிஸாவேயாகும். மேலும், மகான் முஹம்மத் நபியின் வருகையைப் பற்றி, மூஸா நபி காலத்திலேயே, உலக ஜனங்களுக்கு இறைவன் அறிமுகப்படுத்தி, 'பஷாரத்' செய்திருந்தான் என்பதும் மிகத் துலக்கமாகிறது.

இறைவன் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு அருட்புரிந்த மற்றொரு அற்புதம் "ஞானோதய ஹிருதயம்" என்னும் முஃஜிஸா வாகும். இதை "ஷக்குஸ் ஸத்ர்" என்றும் சொல்லலாம். அதாவது நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் சிறு பிராயத்தில் விளையாடிக்கொண்டிருக்கும்போது, தேவதூதர் எனப்படும் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து, முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடைய புனித நெஞ்சினைப்பீறி அதைப் பரிசுத்தப்படுத்தி, ஆண்டவன் புறத்திலிருந்து அபாரமான ஞானங்களையும் அதற்குள் புகுத்தி அறிவு ஊற்றுக்களையும் தத்துவராய்ச்சித் திறனையும் திணித்துப் பெருமைப் படுத்திச் சென்றார் என்பதாகும். இதன் உட்கருத்து யாதெனில்:

நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள், பால்யத்தில் எந்தப் பள்ளிக்கூடத்திலும் எந்தக் காலேஜிலும் 'பாஸ்' பண்ண வில்லை; எந்த யூனிவர்ஸிட்டிக்கும் செல்லவில்லை. ஆனால், எல்லாம் வல்ல சர்வக்ஞனான அல்லாஹு தஆலாவிடமிருந்து அபாரமான ஞானோதயம் நபியவர்களுக்கு இயற்கையாகவே அருள் பாலிக்கப்பட்டது. எனவே, எழுத்தறிவில்லாத 'உம்மீ' யாக யிருந்தும், நபியவர்கள், உலகத்துக் கல்வி ஞானமெல்லாம் கசடறத் தெரிந்தவர்களாய் விளங்கினார்கள்; பாரமார்த்திக ஞானத்தில் மகாப் பெரும் அறிஞராய் விளங்கினார்கள். ஆதலின், இந்த ஞானோதய வெளிப்பாட்டுத் திறனே, பிறிதொரு பெரும் முஃஜிஸா என்னும் அற்புதமாகும்.

எல்லா முஃஜிஸாக்களைவிட மகாப் பெரியதும் என்றென்றும் உலகத்தில் நிலைத்திருக்கும்படியான அமரத்துவம் வாய்ந்ததுமான அற்புத முஃஜிஸா குர்ஆன் ஷரீபே யாகும். திருக்குர்ஆன் வேதம் ஆண்டவனால், நபியவர்கட்கு வஹீ என்னும் ஞானோதயம் (ஜிப்ரயீல்) மூலமாய் அருளப்பெற்ற சகல கலா ஞானப்பொக்கிஷ போதனை யாகும். எழுத்துப்படிப்பு பாடபயிற்சி யில்லாத பாமர நபியின் திருவாயி லிருந்து, திருவேத வாக்கியங்களில் மிகச் சிறந்ததும் இணையற்றதுமான ஆயத்துக்கள் வெளிவந்ததானது ஒரு மகா பெரும் அற்புதமாகவே விளங்குகிறது.

அத்துடன், இந்தக் குர்ஆன் ஷரீப் வாக்கியங்க ளெல்லாம் ஒரு கித்தாபாக (கிரந்தமாக) திரட்டப்பட்ட பின், அது உலகில் இணையில்லா அற்புதமாக நிலைத்து விட்டது அதாவது, முஸ்லிம் பக்த சிகாமணிகள் அதன் 6666 ஆயத்துகளையும் 114 அத்தியா

யங்களையும் 30-பெரும் பாகங்களையும் ஆதியோடந்தமாய் அப்படி மனப் பாடம் செய்து மனனம் பண்ணிக் கொள்வது ஓர் இலேசான காரியமாய் விட்டது. எனவே, உலக முஸ்லிம்களில் இலக்ஷக் கணக்கான பேர்கள், அன்று தொடுத்து இன்றுவரை "ஹாபிலுல் குர்ஆன்" களாக இருந்து ஓதிப் பாராயணம் செய்து வருகிறார்கள். எனவே, ஏதேனும் சம்பவத்தால் அல்லது சோதனையால், உலகத்து இஸ்லாமிய நூற் பிரசுராலயங்களி லிருந்தும் இஸ்லாமிய பதிப்பகங் களிலிருந்தும் திருக்குர்ஆன் பிரதிகளை யெல்லாம் எந்த அரசாங்க மேனும் பறிமுதல் பண்ணி தீயில் போட்டு எரித்துவிட்டாலும், அல்லது அழித்துவிட்டாலும், அப்போதும் குர்ஆன் ஷரீப், ஒருசிறி தும் மகிமை குன்றாது மாண்பு அழியாது, அகிலமெங்கும் நிலைத்து ஓதப்பட்டே வருமென்பதில் சந்தேகமில்லை. ஏனெனின் இலக்ஷக் கணக்கான ஹாபிஜ் சாஹிப்களின் மனதை விட்டு குர்ஆன் திலா வத்து சக்தியை எந்த துஷ்ட சமூகத்தாலும் எந்த துர்த்த அரசாங் கத்தாலும் போக்கிவிட முடியாது. ஆதலின், குர்ஆன் ஷரீப், முஹம்மத் நபிக்கு ஆண்டவன் அருள் பாலித்த மகாப் பெரும் அற்புத சாதனையாகு மென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இத்தரணியில் ஓர் அபூர்வ விருக்ஷத்தை நட்டு, திருநீர் ஊற்றி வளர்த்து வைத்து விட்டார்கள். அந்த மரம் வளர்ந்துப் பரவி வியாபித்து நாற்றிசையும் கிளைகள் ஓடி, எண்டிசையும் நிழல் படர்ந்து கொண்டே போகிறது. அந்த அற்புத விருக்ஷத்தின் பெயர் தீனுல் இஸ்லாம் என்பதாகும். அது ஒரே விருக்ஷம்தான். அதன் ஆணிவேர் திருமக்கா நகரில் பதிந்திருக்கி றது. அதன் பிரதான கிளை திருமதீனாவில் படர்ந்திருக்கிறது. அதன் உப கிளைகளோ, உலகத்தின் எல்லா முக்கிய நாடுகளிலும் நகரங்களி லும் ஊர்களிலும் கிராமங்களிலும் வியாபித்துப் பரவி இருக் கிறது.

ஒரு நூறு முஸ்லிம்கள் கூடிவாழும் ஒவ்வொரு ஊரிலும் ஒரு சிறு மஸ்ஜிதாவது இருப்பதைக் காணலாம். சில நகரங்களில் பல மஸ்ஜிதுகள் அழகுற நிர்மாணிக்கப்பட்டு நிலைத்திருந்து வருகின்றன. இக்காலை நம் கீழ்த்திசை நாடுகளில் மட்டுமில்லை; அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான் முதலிய மேலை நாடுகளிலெல்லாம் தீனுல் இஸ்லாம் விருக்ஷக் கிளைகள் பரவி, முஸ்லிம்கள் வியாபித்து,

ஜோதிப் பிரகாசம் இலங்கி வருகிறது. மேனாட்டு அரசாங்கங்கள் தங்கள் நகர்களில் மஸ்ஜிதுகள் நிர்மாணிக்கப்படுவதும், பாங்கு சொல்லப்படுவதும், முஸ்லிம்கள் இஸ்லாமிய ரீதியில் வாழ்வதும் தங்களுக்குப் பெருமை என்று கருதுகிறார்கள். ஆதலின், அரபு நாட்டுடன் சம்பந்தம் பெருக்கிக் கொண்டு வருகிறார்கள்.

எல்லாம் வல்ல இறைவனின் அற்புதமான சாதனைகளுக்கு ஓர் அளவு கிடையாது. அவனது அருட் பாக்கியம் உலக மக்களிடையெல்லாம் வியாபித்து நிலவி யிருப்பதே போல், இஸ்லாமியப் பாக்கியமும் வியாபித்துப் பரவி நிலைத்து, அல்லாஹ்வின் குத்ரத்தையும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் மகிமையையும் நிரூபித்து வருகிறது. அல்ஹம்து லில்லாஹ்!

---


## இரத்தச் சின்னம்

### இது திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த ஒரு துப்பறியும் நாவல்

சிரச்சேதம் செய்யப்படுவதி னின்று சீர்கெட்ட குற்றவாளி யொருவன் தற்செயலாகத் தப்பிப் பிழைத்திராவிடில், இரத்தச் சின்னம் என்னும் இரகசியக் குழு இயங்கத் துவங்கி இராது. நீதி பரிபாலனத்தில் பரிதவிக்கத் தக்க முறையில் நிகழ்ந்த இந்த அசம்பாவிதத்துக்குச் சில வருடங்களுக்குப் பிறகு இரக்க சிந்தையற்ற ஒருவன் இங்கிலாந்தில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடலானான். தீர்க்க ஆலோசித்து திட்டமிட்டுத் திறமையோடும் தீரத்தோடும் செயலாற்றுவதன் மூலம் தனக்கு உதவியாளர்களாக ஏராளமான ஆட்களைச் சேகரித்துக் கொண்டான் அவன். ஒருவருக்கொருவர் பரஸ்பர பழக்க மில்லாமலும் அறிமுக மில்லாமலும் அதியற்புதச் செயல்கள் புரிந்த இந்த இரகசியக் குழுவிற்குத் தலைமை தாங்கிய மர்ம மனிதன் இரத்தச் சின்னம் என்று கையெழுத்திட்டான்.

அவனின் மர்ம இரகசியத்தைக் கண்டு பிடித்தல் மிக ஆச்சரியமானது. இதன் விலை ரூ. 1—4—0

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(19-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : : சார சங்கிரஹம்

## பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஷ்மத் பாகவி)

### மகாப் பிரளயத்திற்குப் பலியான நூஹு நபி சமூக வரலாறு

நூஹு நபிக்கு (இறைவன், இறுதியாக இவ்வாறு) வஹீ அறிவித்து வைத்தான்: "ஏ நபியே, உம்முடைய கூட்டத்தாரிலிருந்து (இதுகாறும்) யார் யார் விசுவாசம் கொண்டார்களோ அவர்களைத் தவிர்த்து மற்றவர்கள் (இனிமேல்) விசுவாசம் கொள்ளவே மாட்டார்கள். மேலும் இந்த (புத்தி கெட்ட) மனிதர்கள் செய்துழலும் (தகாத) காரியங்கள் மீது நீவிர் பச்சாத்தாபப்பட்டு உருகவேண்டாம். இனி உமது கடமை யாதெனில்: எம்முடைய (ஞானோதய) வஹிக் கட்டளைப் பிரகாரம், உம்முடைய மேற்பார்வையின் கீழ், (மிகப் பெரிய) படகு ஒன்றை நிர்மாணிப்பீராக. வழிகெட்ட (விசுவாசங் கொள்ளாப்) பேர்வழிகளைப் பற்றி (இறைவனாகிய) எம்மிடம் நீர் பரிந்துப் பேச வேண்டாம்; ஏனெனின், அவர்களெல்லோரும் (பிரளயத்தில்) மூழ்கி அழிந்துப்போக வேண்டியவர்களே யாவர்."

இதன் பிரகாரம், நூஹு (நபி) படகு நிர்மாணிக்கத் தொடங்கினார். நபி நூஹுடைய கூட்டத்துக்குத் தலைவனாக இருந்தவன், அப்போது அந்த(ப் பட்டறை) பக்கம் போக நேரிடும் போதெல்லாம் (நூஹு நபியும் ஆட்களும் மரம் செதுக்கிப் படகு செய்து கொண்டிருப்பதைப் பார்த்து) பரிகாசச் சிரிப்பாகச் சிரிப்பான். இதைக் கண்டு (மனம் வெதும்பும்) நூஹு நபி "இன்று நீங்கள், எங்களைக் கண்டு ஏளனமாகச் சிரிக்கிறீர்களா? (சிரியுங்கள்). நாளை நாங்கள் உங்கள் கதியைக் கண்டு இவ்வாறேதான் சிரிக்கப் போகிறோம். கூடிய சீக்கிரம் யார் மீது மகாப் பெரும் தெய்வத் துன்பம் (அவமானம்) நேரிடப்போகிற தென்பதையும், யார் (கியாமத்திலும்) சாஸ்வதமான வேதனைக்கு ஆளாகப்போகிறார் என்பதையும் நீங்கள் (சுயமே) அறிந்து கொள்ளவே போகிறீர்கள்" என்று நூஹு நபி (எச்சரிக்கை செய்து) கூறினார்.

அதன் பின் (இறைவனாகிய) எமது கட்டளை பிறக்கும் சமயமும் வந்து சேர்ந்தது. தெய்வீகத் தண்டனை உத்வேக மடைந்தது. அப்போது யாம் நூஹ் (நபி)க்கு இவ்வாறு உத்தரவிட்டோம்:

"நூஹே! (உலகிலுள்ள) உயிர்ப்பிராணி (ஜந்துக்)களில் இரண்டிரண்டு ஜோடிகளை (ப்பிடித்து) சேமித்து வைத்துக் கொள்வீராக. இன்னும் எவைகள் அழிந்து போக வேண்டுமென்று முன்னரே யாம் கட்டளை யிட்டுள்ளோமோ அவைகளையும் விட்டுவிட்டு, உங்கள் மனைவி மக்களையும் இன்னும் விசுவாசம் கொண்டுள்ள நல்ல மனிதர்களையும் மட்டும் உமது (பெரிய) படகில் ஏற்றிக் கொள்வீராக" என்று.

(ஈமான் கொண்ட) விசுவாசிகள் நூஹு நபியுடன் வெகு சொற்ப பேர்களே (வந்து சேர்ந்து) இருந்தார்கள். அப்போது நூஹ் நபி, தன்னுடைய ஜனங்களை நோக்கி "அன்பர்களே! (பிரளயத்தில்) இந்தப் படகு நீந்துச் செல்வதும், எங்கேனும் போய் தங்குவதும் அல்லாஹ்வுடைய திருநாமத்தின் (கட்டளையின்)படியே ஆகும். (நம்முடைய இஷ்டத்திலில்லை.) ஆண்டவன் (தன் அடியார்களுக்கு) மிகவும் கிருபை புரிகிறவனாகவும் அருள் பாலிப்பவனாகவும் இருக்கின்றான்" என்று ஆறுதல் சொன்னார்.

பிறகு (கடும் மழைபெய்தும், பூமி பிளந்துப் பிரளயம் பொங்கியும்) வெள்ளம் வந்து, பெரும் அலைகளுக்கு மத்தியில், அந்தப் படகு ஒரு மிதக்கும் மலைபோல் அலக்கழிந்து கொண்டிருந்தது. அப்படி படகு புறப்படும்போது, கரையில் நூஹு நபியுடைய ஒரு (தரிதலைப்) பிள்ளை தங்கியிருந்து விட்டான். அவனை நோக்கி நூஹு நபி "ஏ மகனே! வேண்டாம். எங்களுடன் வந்து, இந்தப் படகில் ஏறித் தப்பித்துக் கொள்! அந்தக் காபிர் கூட்டத்துடன் சேர்ந்திருந்து அழிந்து போகாதே" என்று எடுத்தோதினர். அதற்கு அதமப் பிள்ளை, "போ போ! (அப்படி வெள்ளம் வந்தால்) நான் நீச்சல் அடித்துக் கொண்டு, மலையுச்சியில் ஏறிக் கொண்டு, இந்த கஷ்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வேன்" என்று (விதண்டாவாதமாகப்) பதில் கூறி விட்டான். எனினும் நூஹு நபி, ஆண்டவனுடைய இந்தக் கடுமையான தண்டனையி லிருந்து (சுயமே) ஒருவராலும் தப்பித்துக் கொள்வ தென்பது முடியாது; யார் மீது அல்லாஹ்வுடைய கருணை பிறக்குமோ அவர்கள் மட்டும் தான் தப்பமுடியும் என்றும் போதித்தார். இப்படி தந்தைக்கும் தனயனுக்கும் பேச்சு நடந்து கொண்டிருக்கும் போதே, மலை போல் ஒரு அலை கிளம்பி இருவர்க்கிடையிலும் வெள்ளத்தால் பிரிவினை ஏற்படுத்தி விட்டது. எனவே, அந்த (போக்கிரிப்) பிள்ளையும் மூழ்கி, மாண்ட மற்றக் கூட்டத்தோடு சேர்ந்து அழிந்துப் போனன்.

அதன் பிறகு இறைவனல் கட்டளை பிறப்பிக்கப்பட்டது: "ஏ பூமியே! நீ உன் வயிற்றுக்குள் இந்தப் பிரளயத் தண்ணீரை

யெல்லாம் உறுஞ்சுக் கொள்வாயாக; ஏ வானமே! நீ மேலும் நீர் பொழிவதை நிறுத்திக் கொள்வாயாக". இந்த கட்டளைப் பிரகாரம் வெள்ளப்பிரவாகம் தணிந்து, தண்ணீர் வற்றிப்போயிற்று. காபிர் களெல்லோரும் தொலைந்து அவர்கள் விஷயம் (வாழ்வு) முடிவ டைந்துப் போய் விட்டது.

நூஹ் நபி ஏறியிருந்த பெரும்படகானது, ஜோதி பருவத்தின் மீது (தட்டுண்டு) தங்கிப் போயிருந்தது. அப்போது நூஹு நபிக்கு அறிவிக்கப்பட்டது: "கொடுங்கோலர்களின் அக்கிரமங்களி லிருந்து உலகம் தூய்மை யடைந்து விட்டது; (இனி நீங்கள் இறங் கிப்போகலாம்) என்று.

அப்போது நூஹு நபி, தன்னுடைய இரக்ஷகனை வேண்டிக் கொள்ளலானார்: "ஏ இறைவனே! என்னுடைய மகன் என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவனாயிற்றே; (என் மனைவி மக்களைக் காப் பாற்றித் தருவதாக நீ வாக்களித்தாயே) உன்னுடைய வாக்குறுதி ஒருபோதும் உண்மையானதாயிற்றே! நீ அதிகாரிகளுக் கெல்லாம் மகா அதிகாரியாக இருக்கிறாயே!" என்று பிரார்த்தித்தார்.

அதற்கு இறைவன் அளித்த பதில் மொழியாவது:— "ஏ நூஹே! உமது அந்த மகனுடைய நடவடிக்கை (எண்ணம்) எல் லாம் கெட்டுப்போய் விட்டனவே; ஆதலின் அவன் உம்முடைய மனைவி மக்களில் (குடும்பத்தில்) இருக்க யோக்யதை யற்றவனாய் விட்டானே! எந்த விஷயத்தின் அந்தரங்கம் உமக்குப் புரிய மாட் டாதோ அதைப் பற்றி எம்மிடம் (வற்புறுத்திக்) கேட்கவேண்டாம். (இறைவனாகிய) யாம் உமக்கு (மீண்டும்) அறிவுறுத்துகிறோம். ஏ நபியே! மூட ஜனங்கள் பேசுவதைப் போல் நீர் எம்மிடம் (பன்னிப் பன்னி) பேச வேண்டாம்" என்பதாகும்.

அதன் மேலும் நூஹு நபி, (இறைவனிடம் கை யேந்தி) ஏ எனது இரக்ஷகனே! நான் மீண்டும் உன்னிடம் (சரணாகதிப்) பாதுகாப்பு வேண்டிக் கொள்கிறேன்; நான் உண்மையை உய்த் துணர்ந்து அறியாத்தனமாக, நீ மறுத்துவிட்ட பேச்சைப் பற்றி (பன்னிப் பன்னிப்) பேசி விட்டேன். நீ என்னுடைய இந்தப் பாவத்தை மன்னிக்கா விட்டால் வேறு யார் என்னை மன்னிப் பார்; உன்னைத் தவிர யாரும் என் மீது இரக்கம் கொள்ளமாட்டார் கள்; என்னை நீ மன்னிக்காவிட்டால் நான் மகா நஷ்டமடைந்தவர் களில் கிடப்பேன்" என்று வேண்டிப் பிரார்த்தனை புரிந்தார்.

எனவே, இறைவனுடைய திருச்சன்னிதானத்தி லிருந்து நூஹு நபிக்கு இவ்வாறு உத்திரவு பிறந்தது. "ஏ நூஹே! எம்

மிடமிருந்து சாந்தியும் நல்லபிவிருத்திகளும் (பரக்கத்தும்) பெற்ற வராக(க்ஷேமத்துடன்) இப்படகி லிருந்து இறங்கிச் செல்வீர்களாக- உங்களுடன் (விசுவாசத்துடன்) இருந்தார்களே அவர்களுக்கும் சாந்தி சமாதான நல்வாழ்வு உண்டாகக் கடவது. உமது ஜீவியத்துக் குப் பிறகு யாம், இன்னும் அநேக சமூகங்களை (உம்மத்துகளை உல கில்) உண்டாக்கி வைப்போம்; அவர்களுடைய (சன்மார்க்க இலக்ஷி யக்) காரியாதிகளை யாம் வெற்றிகரமாக்கித் தருவோம். ஆயினும் அவர்களிலும் வழி கெட்டு அதிக்கிரமம் புரிவோர் மீது அதாபு என்னும் (தெய்வத்தண்டனை) உண்டாக்கியே தீரும். (ஸூரா: ஹூத்; ருகூ: 4.)

## விருத்தாப்பியத்தில் இப்ராஹீம் நபிக்கு புத்திரபாக்கியம் உண்டான வரலாறு

(இறைவனுகிய) யாம் எமது (சில) தேவதூதர்களை (மலக்கு களை) இப்ராஹீம் (நபி) இடம் சுபமான (நற்செய்தி) தூது சொல்லிவரும்படி அனுப்பிவைத்தோம். அத்தூதர்கள், இப்ராஹீம் நபியிடம் வந்து ஸலாம் செய்தார்கள். இப்ராஹீம் நபி அந்த ஸலாமுக்கு ஜவாபு கொடுத்தார். அத்துடன் அவர்களுக்கு (விருந்து) உபசாரம் செய்வதற்காக, இப்ராஹீம் (நபி) அறுத்துப் பொரித்தெடுத்த கன்றுக் குட்டி மாமிசத்தை (எதிரில்) கொண்டு வந்து வைத்தார். ஆனுல் என்ன கண்டார் எனின்; (விருந்தினர் என பாவிக்கப்பட்ட) அன்னவர்களின் கரங்கள், அதைத் தின்பதற் காக எழவே இல்லை. எனவே, இப்ராஹீம் நபிக்கு அவர்கள் மீது சந்தேகம். (ஓ, ஒருக்கால் இவர்கள் கொள்ளைக்காரர்களாய் இருப் பரோ; எம் வீட்டு உப்புணவை உண்ணுதிருக்கின்றனரே) என்று உண்டாயிற்று.

இதை உணர்ந்து கொண்டே (மலக்குகளாகிய) அவர்கள், (இப்ராஹீம் நபியை நோக்கி) "எங்களைப் பற்றி நீவிர் பயப்பட வேண்டாம்; நாங்கள்(மனிதர்களல்ல; இறைவனுல் அனுப்பப்பட்ட) தூதர்கள் (மலக்குகள்); லூத் நபியான கூட்டத்தார் விஷயமாய் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறோம். (பாபத்தில் மூழ்கிப்போன அவர் களைத் தண்டித்து அழிக்க வந்துள்ளோம்)" என்று கூறினுர்கள்.

இந்த சம்பாஷணையின்போது இப்ராஹீம் (நபியின்) மனைவி (ஸாரா உம்மா)யும் அருகில் நின்று (கேட்டுக்) கொண்டிருந்தார். அவ்வம்மை, (தேவதூதர்களின் வருகையால்) மிகவும் சந்தோஷப் பட்டுக்கொண்டிருந்தார். எனவே (இறைவனுகிய யாம்) தூதர்கள் மூலம் அவர்கட்குப் புத்திர பாக்கியம்(அதாவது) இஸ்ஹாக் (புத்தி ரனுகப்) பிறக்கப் போகிற நற்செய்தியை அறிவித்தோம். மேலும்

இஸ்ஹாக்குப் பிறகு, யாகூப் (நபி) (இப்ராஹீம் நபிக்குப்) பேரனாகப் பிறக்கப் போகிற நற்செய்தியையும் அப்போது அறிவித்தோம். இதைக் கேட்டு (வியப்படைந்த) அந்த விருத்தாப்பிய மாது, "நான் துற்பாக்கியவதி யாயிற்றே, நான் மிகவும் கிழவியாகிப் போயிருக்கிறேனே; எனக்கா புத்திர பாக்கியம் உண்டாகும்! இதோ என் கணவரும் (இப்ராஹீம் நபியும்) கூட மிக விருத்தாப்பியராகி யிருக்கிறாரே; இந்நிலையில் எங்களுக்கு பிள்ளை பிறப்பது மிகவும் ஆச்சரியப் படத்தக்க விஷயமாய் இருக்கிறதே" என்று கூறினர்.

அதைக் கேட்டு தேவதூதர்கள்: "என்ன! ஆண்டவனுடைய கட்டளைப் பிரகாரம் இப்படி (புத்திர பாக்கியம் உண்டாவது) நடந்தால், அது ஆச்சரியப்படத்தக்க விஷயமாய் உங்கட்குத் தெரிகிறதா? ஏ (இறைவனின்) இல்லத்துக்கு உரியவர்களே! உங்கள் மீது அல்லாஹ்வுடைய ரஹ்மத்தும் பரக்கத்தும் அதிகமதிகம் உண்டாகக்கடவது. சந்தேகமின்றி, இறைவன் சர்வ புகழுக்கும் தகுதியானவனாக இருக்கிறான்; அவன் மகாப் பெருந்தகையாளன். (அவனால் எல்லாம் ஆகும்)" என்று தேறுதல் கூறினர்கள்.

எனவே, இப்ராஹீம் (நபித் தம்பதியர்) உள்ளத்திலிருந்து அச்சம் (ஆயாசம்) நீங்கி விட்டது; அவர்களுக்கு புத்திர பாக்கிய நற்செய்தியும் கிடைத்து விட்டது. பிறகு இப்ராஹீம் நபி, லூத் நபிக் கூட்டத்தாரின் விஷயமாக(இறைவனுகிய எம்முடன்) தர்க்கம் செய்யலானர் (அதாவது: கட்டளைப்படி, லூத் நபிக்கூட்டத்தார் தேவதண்டனையால் அழிக்கப்பட்டுப் போவதை இப்ராஹீம் நபி விரும்பவில்லை); வாஸ்தவமாகவே, இப்ராஹீம் (நபி) சகிப்புத் தன்மையாளராகவும், மிகவும் இளகிய மனதை யுடையவராகவும் தவ்பா செய்து மீளும் நல்லவராகவும் இருந்தார். ஆயினும் (இறைவனுகிய) யாம், (இப்ராஹீம் நபியை நோக்கி) "ஏ இப்ராஹீமே! இந்த சர்ச்சையை நீர் (எமது பொறுப்பில்) விட்டு விடுவீராக. இது விஷயமாய், உமது (இறைவனுகிய) இரக்ஷகனின் கட்டளை பிறப்பிக்கப்பட்டு ஆய்விட்டது; அந்த (அதமக்) கூட்டத்தார் மீது தெய்வத் தண்டனை (அதாபு) வந்தே தீரும்; அது ஒருபோதும் தடைப்பட்டுப் போகாது" என்று யாம் அவருக்கு அறிவித்து விட்டோம். (ஸூரா: ஹூத்; ருகூ-7)

# முரீது உபதேசம்

இதில் அடங்கியுள்ள விஷயங்களாவன :—உண்மை பக்கிர்கள் யார் ? இராதத்—முரீத்—முரூதத் விபரம், முரீத் தென்பவர் யார்? தஸவ்வுப் விபரம், முரீதின் ஆரம்ப நிலை, ஷேக் சன்னிதானத்தில் முரீதின் மரியாதை, முரீதுக்கு ஷைக் ஆதரவு, சமா என்னும் புகழ் பாடக் கச்சேரி விபரம், முரீதுக்கு பீர் ஸாஹிபிடம் இருக்க வேண்டிய பயபக்தி, முரீதுக்கு ஷைக் ஸாஹிபின் உபதேசப் பயிற்சி விதம், சகோதர வாஞ்சையும் ஏனைய பழக்க உபசாரங்களும், அந்நியர் சேர்க்கை, செல்வந்தர் சேர்க்கை, பகிர்களுடன் சேர்க்கை வைத்தல், பகிர் ஸாஹிபின் எளிமைச் சிறப்பு, பகிரும் சுவால் செய்தலும், பகிர் சுகானுபவ ஒழுக்கம், பகிர் சாப்பாட்டு ஒழுக்கங்கள், தோழருடன் உபசார முறை, பிள்ளை குட்டிகளுடன் பகீரின் பழக்கச்சார முறை, பிரயாணத்தில் பகிர்கள் எவ்வாறு ஒழுக வேண்டும், பகிர் சாஹிபு இராகம் செவியுறுதல், முஜாஹிதா (தவப்பர யுத்தம்) விபரம், முஜாஹிதாவின் தாத்பரியம், முஜாஹிதாவை பூர்த்திக்கும் அம்சங்கள், ஆண்டவன் மஃரிபத், ஷைத்தானைப் பற்றிய எச்சரிக்கை, நப்ஸ் எச்சரிக்கை, ஆண்டவன் பயபக்தி, மஹான்களின் பழக்க ஆசாரங்கள், தவக்கல் என்னும் நம்பிக்கை, நற்குண சீலங்கள், ஆண்டவன் சந்நிதானத்தில் நன்னடத்தை, ஷுக்ரு (நன்றி) விபரம், ஸப்று விளக்கம், ரிஜா (சம்மதம்) உண்மை விளக்கம், பரிசுத்தம், தௌபாச் செய்தல், இராக்கால வணக்கம், நபி பெருமானாரின் இராத் தொழுகை, தனிமையில் உபதேசித்தல், உபதேச ஷராத்துகள், நப்ஸும் ஆத்மாவும், தங்கள் ரியாஜத், குத்பு நாயகத்தின் துஆ, மதக் கல்வி முதலியவைகளை விரிவாய் விபரிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு முஸ்லிமும் இப்புத்தகத்தை வாங்கி படித்து பிரயோஜன மடைவது அத்தியாவசியம்.

இதன் விலை ரூ. 1—8—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இஸ்லாமிய சரித்திரச் சாரம்.

## ஹிஜ்ரீ 1-லிருந்து 50-வரை

(டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

### ஹிஜிரி-8:

இவ்வாண்டு, இஸ்லாமியர் வாழ்க்கையில் பல சோதனைகள் ஏற்பட்டன. எனவே, நான்கு போராட்டங்கள் (கஜ்வாக்கள்) நிகழ்வுற்றன. அவற்றில் ஜங்கே மவுத்தா என்பது குறிப்பிடத் தக்கது. இப்படுகளத்தில், 3000 முஸ்லிம் வீர முஜாஹிதுகள், ஒரு லக்ஷம் கிறிஸ்துவ சிப்பாய்களை எதிர்த்து வென்று,முறியடித்து விட்டார்கள். இளம் பிறைக்கும் சிலுவைக்கும் நடந்த பெரும் போராட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த யுத்தத்தில்தான் ஜஃபர் இப்னு அபூ தாலிப் (ரலி) அவர்கள் கொல்லப்பட்டு ஷஹீதானார்கள்.

இவ்வாண்டே, இஸ்லாமியச் சரிதையில் விசேஷமான புனித நாள் என்னலாம். ஏனெனின் இதன் புனித ரமலான் மாதத்தில்தான் திருமக்கா நகரம் வெற்றிக்குள்ளாயிற்று. அதாவது, 10000 முஸ்லிம்கள், முன்னேறிச் சென்று, எத்தகைய போராட்டமோ இரத்தக் களறியோ, ஆயுத மோதலோ இல்லாமல் திருமக்காவை, தார்மீக முறையில் கைப்பற்றி, இஸ்லாமியத் துவிஜத்தை நிலை நாட்டினார்கள். இவ்வாண்டே கஜ்வா ஹுனைனிலும் கஜ்வா தாயிபிலும் முஸ்லிம்களுக்கு ஜெயம் கிடைத்தது.

இவ்வாண்டு இஸ்லாமியச் சரித்திரத்தில் மிகவும் விசேஷம் உடையதாகும். ஏனெனின், இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையும் உலக முஸ்லிம்களை யெல்லாம் ஒன்று சேர்த்து வைப்பதுமான ஹஜ்ஜு வணக்கம், முறைப்பிரகாரம் இவ்வருஷத்தில் கடமையாக்கப் பட்டு, நிறைவேற்றி வைக்கப்பட்டது.

இவ்வாண்டு ஷவ்வால் மாதம், நபிகள் நாயகம் ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்களின் குமாரிகளில் ஒருவரான ஹஜ்ரத் ருக்கையா(ரலி) இறந்துவிட்டார்கள்.

### ஹிஜிரி-9:

இவ்வாண்டு, தபூக் என்ற இடத்தில் யுத்தம் நிகழ்வுற்றது. வெற்றியும் கிடைத்தது.

இவ்வருஷம் ஹபஷா (அபிஸீனிய) மன்னரான ஷாஹ் நஜ்ஜாஷி இறந்து போய்விட்டார்.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், குமாரிகளில் மற்றொருவரான ஹஜ்ரத் உம்மு குல்தூம் இவ்வாண்டில் இறந்துபோய் விட்டார். மேலும், மாரியா கிப்திய்யா எனப் பெயருடைய திருமனை யாட்டியார் வயிற்றில் ஹஜ்ரத் இப்ராஹீம் (என்ற ஆண் குழந்தை) பிறந்தது இவ்வருஷமே.

இவ்வாண்டு ரபீவுல் ஆகிர்மாதம், பிரபல சஹாபா (த்தோழர்) களான தமீமுத் தாரீ (ரலி), அபூதர்தா (ரலி) ஆகியோர் பரிசுத்த தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்து முஸ்லிமானார்கள்.

## ஹிஜ்ரி-10:

துல்ஹஜ்ஜு மாதம், நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல் லாஹி (ஸல்) அவர்கள், தம் ஆயுளில் இறுதி உபந்நியாசம் திருவுள மானார்கள். இதைத்தான் "ஹஜ்ஜதுல் விதாஃ" என்றும் சொல்லு கிறோம்; அதாவது 'பிரிவுக்கு விடைபெறும் ஹஜ்ஜு' என்று இதன் பொருள் கூறலாம்: ஏனெனின், இதன் பிறகு நபிகள் பெருமானார் (ஸல்) திருமக்கா நகர் சென்று ஹஜ்ஜு செய்யும் வாய்ப்பு பெறவில்லை.

இவ்வாண்டு ஷவ்வால்மாதம் 29-ந்தேதி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஆண் குழந்தை—மாரியா கிப்திய்யா வயிற்றில் பிறந்த பாலகன்—ஒரு வருஷமும் ஆறுமாதமாகிய சிறு பிராயத்திலேயே இறந்து போய் விட்டார். இதன் உடலம் ஜன்னதுல் பகீஃ என் னும் உத்தியானவனத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வாண்டு, காலித் பின் வலீத் (ரலி) நஜ்ரான் தேசத்துக்கும், ஹஜ்ரத் அலி (ரலி) யமன் தேசத்துக்கும் இஸ்லாமியத் தூதுவர்களாக அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

## ஹிஜ்ரி-11:

இவ்வாண்டுதான் இஸ்லாமியச் சூரியன் அஸ்தமித்துப்போன துரதிருஷ்ட ஆண்டாகும். ஏனெனின், நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், சொற்பநாள் ஜுரத்தினால் பீடிக் கப்பட்டிருந்து, தமது 63-ம் பிராயத்தில், இவ்வாண்டு ரபீவுல் அவ்வல் மாதம் 12-ந்தேதி, திங்கட்கிழமை தினம், நிலையில்லா இம் மண்ணுலகை நீத்து மரித்து, சதா சாஸ்வதமான பொன்னுலகை யடைந்தார்கள்; வபாத்தானார்கள். (இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.)

இவ்வருஷமே, ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள், முஸ்லிம் சமூக உம்மத்துகளின் ஏகோபித்த ஆதரவுக் கிணங்கி, இஸ்லாத்தின் (முதல்) கலீபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இவ்வாண்டு, ரமலான் மாதம் 3-ங் தேதி, (நோன்புகாளில்) ஹஜ்ரத் பாத்திமா ஜஹ்ரா நாயகி (ரலி) அவர்கள், தமது 29-ம் பிராயத்தில் மவுத்தாகி மறைந்தார்கள்.

இவ்வாண்டே, திருக் குர்ஆன் ஷரீப் (வாசக) ஆயத்துக்களை, ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள், பலபேர்களிடமிருந்து ஒருங்கு சேகரித்து 'முஸ்ஹப்' ஆக்கி, 'கிதாபு' ரூபமாக்கினார்கள். எனவே புனித குர்ஆனை உருவாக்க முயன்ற முதல் புருஷர் அபூ பக்கர் (ரலி)யே ஆவர்.

## ஹிஜ்ரி-12:

இவ்வாண்டு இஸ்லாமிய மாவீரர் ஹஜ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள், 40,000 இஸ்லாமியப் படைவீரர்களைத் திரட்டிக் கொண்டு போய், இஸ்லாமிய வளர்ச்சிக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த கிறிஸ்துவப் பெரும் படையினர்களை எதிர்த்துத் தாக்கி, அவர்களைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்து, தமிஷ்க் தேசத்தையும் பஸ்ரா நகரத்தையும் கைப்பற்றி, இஸ்லாமிய வெற்றிக் கொடியை நிலை நிறுத்தினார்கள்.

## ஹிஜ்ரி-13:

இவ்வாண்டு ஒரு துயர் நேரிட்டது முஸ்லிம்கட்கு. அதாவது, ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள், இரண்டாண்டு மூன்று மாதம் ஒன்பது நாள் மட்டும் இஸ்லாமிய கிலாபத்-ஜனநாயக அரசாட்சி புரிந்து விட்டு, சிலநாள் ஜுர நோயால் வாட்டமுற்று, தமது 63-ம் வயதில் வபாத்தாகி இறந்துபோனார்கள். அவர்கட்கு அடுத்தபடியாய், இரண்டாம் கலீபாவாக, பொதுஜனத் தேர்தலினால் ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி) அவர்கள், அரியாசனம் பெற்றுத் துலங்கலானார்கள்.

## ஹிஜ்ரி-14:

ஷாம் என்னும் சிரியா தேசத்துப் பிரபல பட்டணமா யிருந்த 'பஅலபக்' நகர் மீதும், ஹமஸ் என்ற பிரதேசம் மீதும் முஸ்லிம்கட்கு இஸ்லாத்தின் பெயரால் வெற்றி கிடைத்தது.

ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் தந்தையான உத்மான் பின் ஆஸிர் அபூகுஹாபா (ரலி) அவர்கள், தமது 97-ம் வயதில் இவ்வாண்டு இறந்து போனார்கள்.

ஹஜ்ரத் அமீர் முஆவியா (ரலி) யின் தாயாராகிய ஹிந்த்பின் அக்பா என்பாரும் இவ்வாண்டு இறந்து போனார்.

ஸல்மா பின் ஹிஷ்ஷாம் (ரலி) என்பார், காபிர் அபூஜஹலுடைய சகோதரர்; ஆனல் இவர், ஆதியிலே தீனுல் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முஸ்லிமா யிருந்தார். இவரும் இவ்வாண்டில் மாண்டு மறைந்தார்.

## ஹிஜ்ரி-15:

ஜெரூஸலேம் என்னும் பைத்துல் முகத்தஸையும், அன்தாக்கியா, ஹலம் என்னும் யூத-கிறிஸ்துவப் பிரதேசங்களையும், முஸ்லிம் வீரர்கள், இஸ்லாத்தின் பெயரால் ஜெயித்தார்கள். ஜங்கே யர்மூக் என்ற யுத்தகளத்திலும் இஸ்லாத்துக்கு வெற்றி ஏற்பட்டது. இப் போராட்டங்களில், சொற்ப தொகையினரான முஸ்லிம்கள், ஏழா யிரம் காபிர்ப் படையினரை முறியடித்து வென்றூர்கள்.

இவ்வாண்டே சரித்திர பிரசித்திப்பெற்ற காதிஸிய்யா சம்பவமும் நிகழ்வுற்றது. இவ்வாண்டே, ஹஜ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் கூபா நகரில், முஸ்லிம் பிரஜைகளைக் கொண்டு குடி யேற்றி வாழ வைத்தார்.

## ஹிஜ்ரி-16:

இவ்வாண்டில் முஸ்லிம்கள் படையெடுத்துச் சென்று இஸ்லாத்தின் பெயரால், ஈரான் (பர்ஷிய) தேசத்துப் பிரபல நகரமான ஈவாஜையும், மதாயின், தப்ரேஸ் என்ற ஊர்களையும் பிடித்து வெற்றிக் கொடி நாட்டினூர்கள். அப்போது பூர்வீக பாரசீக மன்னன் 'கிஸ்ரா' நிர்மாணித்துப் போயிருந்த கோட்டை கொத்தள மாளிகை இடிந்து நாசமாயின.

இவ்வாண்டு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பத்தினி மார்களில் ஒருவரான ஹஜ்றத் மாரியா கிப்திய்யா (ரலி) இறந்து போனூர்கள்.

## ஹிஜ்ரி-17:

இவ்வருஷம், கலீபா ஹஜ்றத் உமர் பாரூக் (ரலி) அவர்கள், மஸ்ஜிதே நபவீ என்னும் மதீன நகர்த் திருப்பள்ளி வாசலை மராமத்து செய்வித்து விஸ்தீரணப் படுத்தி வைத்தார்கள். அக்காலத்தில் அரபு நாடாகிய ஹிஜாஸ் பிரதேசமெங்கணும், எப்போதும் கண்டிராத பஞ்சம் ஏற்பட்டது.

பிற்காலத்தில் இஸ்லாமிய ராஜ்ய ஐந்தாவது கலீபாவாக விளங்கிய அப்துல் மலிக் பின் மர்வான் என்பார், அந்த ஆண்டில் தான் பிறந்தார்கள்.

## ஹிஜ்ரி-18:

ஜக்த், நைஷாப்பூர், ஹல்வான் முதலிய (அரபு நாட்டிலல்லாத) ஊர்களையும் முஸ்லிம்கள் பிடித்து, பிறைக் கொடி ஏற்றினர். இந்நாட்களில், ஹல்வான் என்னும் ஊரில் தாவூன் என்னும் பிளேக் நோய் பரவி தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தது. இந்நோய்க்கு சுமார் 25,000 முஸ்லிம்கள் இரையாகி மாண்டு ஷஹீதானார்கள். அவ்வருஷமே அங்கெல்லாம் கடும் பஞ்சமும் பீடித்தது.

இஸ்லாமியச் சம்பிரதாயத்தில் "அஷ்ரயே முபஷ்ஷரா" எனும் பத்து புருஷோத்தமர்களில் ஒருவராகிய ஹஜ்ரத் அபூ உபைதா பின் அல்ஜராஹ் (ரலி) அவர்கள், இவ்வாண்டில் தமது 58-ம் வயதில் இறந்து போனார்கள். மஆத் இப்னு ஜபல் (ரலி) வும் இவ்வாண்டே இறந்து போனார்.

## ஹிஜ்ரி-19:

கெய்ஸ்ஸாரியா என்ற பிரதேசமும் இஸ்லாமிய வெற்றித் துவிஜத்தின் கீழ் இவ்வாண்டிலேயே வந்தது.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு 'வஹீ' வந்து அவர்கள் திருவுளமானதும், இவ்வேதத் திருவாக்கியங்களை (ஆயத்துகளை) ஹஜ்ரத் அபீ கஅப் (ரலி) என்னும் ஸஹாபி அப்போதுக் கப்போது ஏட்டில் எழுதிவைக்கும் 'லேகக்' ஆக இருந்து வந்தவர்; இவரும் இந்த ஆண்டிலேயே இறந்து போனார்.

## ஹிஜ்ரி-20:

இவ்வாண்டுதான் மிஸ்ர் என்னும் எகிப்து தேசம், இஸ்லாமிய வெற்றிக் கொடியின் கீழ் வந்தது.

இஸ்லாத்தின் முதலாவது முஅத்தினாகிய ஹஜ்ரத் (ஹபஷி) பிலால் (ரலி) அவர்கள், தமது 63-ம் வயதில் தமிஷ்க் நகரில் இவ்வாண்டே இறந்து போனார்கள்.

ஹஜ்றத் அபூ ஸுப்யான்-இவர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பால் குடித்து வளர்ந்த சகோதரரும் சிறிய தகப்பனாரின் புதல்வரும்-(சகோதரரும்) ஆவர்; இவரும் இவ்வாண்டே இறந்து போனார்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அத்தை (பூப்பி) எனும் உறவு முறையுடைய ஸபிய்யா (பின்த் அப்துல் முத்தலிப்) தம் 73-ம் வயதில் இறந்து போய்விட்டார்.

## ஹிஜ்ரி-21:

இவ்வாண்டு இஸ்கந்தரிய்யா (அலெக்ஸாண்டிரியா) பிரதேசத்தையும், நிஹாவந்து பிரதேசத்தையும், முஸ்லிம்கள் வெற்றிக் கொண்டார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் "ஸைபுல்லாஹ்" (இறைவனின் கூர்வாள்) எனப் பெருமையுடன் அழைக்கப்பட்ட ஹஜ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களும் இவ்வாண்டே இறந்து போனார்கள்.

உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஜைனப் (பிந்த் ஹஜஷ்) நாயகியும் தம் 53-ம் வயதில் இவ்வாண்டே இறந்து போனார்கள்.

## ஹிஜ்ரி-22:

இக்காலை வல்லமை மிகுந்த ரஷிய தேசப் பகுதிகளாக யிருந்து வரும் ஆஜர்பாயிஜான், தப்ரிஸ்தான், ஹமதான், ரே முதலிய பிரதேசங்களை அக்கால முஸ்லிம் வீராதி வீரர்கள், இவ்வாண்டில் வெற்றி முழக்கத்துடன் பிடித்து ஆளத் தொடங்கினர்.

கூபாவில், இவ்வாண்டு இமாம் ஷாஃபி பிறந்தார்கள்; இந்தப் பெரியார், பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஸஹபாக்களாகிய அருந்தோழர்களில் 500 பேர்களை காணும் பாக்கியம் பெற்றிருந்தார்கள்.

## ஹிஜ்ரி-23:

பாரிஸ் என்னும் பாரசீக நாடும், ஷாம் என்னும் சிரியா தேசமும் இவ்வாண்டு, எப்பகுதியும் எஞ்சியில்லாது முழுதும், இஸ்லாமிய வெற்றிக்குள்ளாய் விட்டன.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தகப்பனாராகிய ரபீஆ பின் அல்ஹாரிஸ் என்பாரும் இவ்வாண்டே இறந்து போனார்.

## ஹிஜ்ரி-24:

இரண்டாவது இஸ்லாமிய கலீபா ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி) அவர்கள், கிலாபத் பதவியில் அமர்ந்து 10-வருஷம் 6-மாதம் 4-நாட்கள் ஆகி யிருந்தன. (ஹி. 24-ல்) ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கட்கு வயது 63. அப்போது, விரோதிகளால் தூண்டி விடப்பட்ட பாரசீக அடிமை 'பீரோஸ்' என்பவனால், இவ்வாண்டே முஹர்ரம் மாதம், சனிக்கிழமை யன்று அநீதமாய்க் கொல்லப்பட்டு ஷஹீதானார்கள்.

ஹஜ்ரத் உதுமான் பின் அப்பான் (ரலி) அவர்கள், இஸ்லாத்தின் மூன்ருவது கலீபாவாக பதவி ஏற்றதும் இவ்வாண்டே யாகும்.

## ஹிஜ்ரி-25:

பனீ உமய்யாக்களின் இரண்டாவது கலீபாவாக பின்னுளில் விளங்கிய யஜீத் பின் முஆவியா, இவ்வாண்டிலேயே பிறந்தார்.

## ஹிஜ்ரி-26:

ஹஜ்ரத் உத்மான் (ரலி) அவர்கள், மஸ்ஜிதுல் ஹராம் என்னும் திருமக்கா பள்ளி வாசலை, இவ்வாண்டு மராமத்து செய்து விஸ்தீரணப் படுத்தி வைத்தார்கள்.

இவ்வாண்டே நைஷாப்பூர் என்னும் பாரசீக நகரமும் இஸ்லாமிய சமூக வெற்றிக் குள்ளாயிற்று.

## ஹிஜ்ரி-27:

பண்டைய முஸ்லிம் வீரத் தலைவரான அப்துல்லாஹ் பின் ஸஅத் (ரலி) அவர்கள், ஆப்ரிக்கா தேசத்தில் அநேக ஊர்களை, இஸ்லாத்தின் பெயரால் பிடித்து கொடி நாட்டினுர்கள்.

## ஹிஜ்ரி-28:

ஹஜ்ரத் அமீர் முஆவியா (ரலி) அவர்கள், மத்திய தரைக் கடலைச் சேர்ந்த 'கப்ரஸ்' என்ற தீவுப் பிரதேசத்து மீது படையெடுத்துச் சென்ருர். ஆனுல் அவ்வாண்டு அங்கு வாழும் குடி ஜனங்களும் தலைவர்களும், இஸ்லாத்திற்கு 'ஜிஸ்யா' (வரி) தருவதாக ஒப்புக் கொண்டு, சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர்.

## ஹிஜ்ரி-29:

ஹஜ்ரத் உதுமான் (ரலி) அவர்கள், மஸ்ஜிதே நபவீ என்னும் மதீன திருப்பள்ளி வாசலையும் இவ்வாண்டே மராமத்து செய்து விஸ்தீரணப்படுத்தி வைத்ததோடு, பூ சித்திர வேலைகளால் ஆக்கப்பட்ட கற்களையும் பொருத்தி, வளைவு முதலியன ஏற்படுத்தினுர்கள்.

(தொடரும்.)

# மிபுத்தாஹுல்ஸலலாஹ் பீ
# யீலாஹின்னிகாஹ்

(இப்புத்தகம் இல்லற வாசிகள் ஒவ்வொருவருக்கும்
அவசியம் வேண்டியது)

இதில் நிக்காஹுடைய வரிசைகளும், அஹ்காம்களும், ஸ்திரீ புருஷருடைய குணலக்ஷணங்களும், ஒவ்வொருவரும் இன்ன குணமுடையவர்களென்று பார்த்த மாத்திரத்தில் கண்டறியக்கூடிய வழியும், ஸ்திரீ, புருஷர்கள் அவசியம் அறியவேண்டிய அநேக ரகசியங்களும், ஒரு புருஷன் விரும்பிய மனைவியையும், ஒரு ஸ்திரீ விரும்பிய கணவனை யும் அடைவதற்கு வேண்டிய இஸ்முகளும் அடங்கி யிருக்கின்றன.

இவை யன்றி ஸ்திரீ புருஷருக் கிடையில் முஹப்பத் உண்டாவதற்கும் ஹமல் உண்டாவதற்கும், ஹமலைக் காப்பதற்கும் அவசியமான இஸ்முகளும், ஹமலில் உண்டாகக்கூடிய பலவகை வியாதிகளுக்கு அரிய ஔஷதங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

முன் பதிப்பிலிருந்ததைவிட இப்பதிப்பில் அநேக அரிய விஷயங்களும் இஸ்முகளும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. வாசிப்போர்க்கே இந்நூலின் அருமை விளங்கும். புதிய பதிப்பு கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 3

புதிய மூன்றும் பதிப்பு

# ஹஸ்ரத் நாகூர் மீரூன் ஸாஹிபு
# ஆண்டவர்களின் காரண சரித்திரம்

இது ஹஸரத் ஸையிது அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது மீரூன் ஸாஹிபு ஆண்டவர்களின் ஜீவியமும், அவர்களின் அற்புதமாகிய கருமத்துகளும் ஒருங்கே நிறைந்தது. இது நேர்த்தியான காகிதத்தில் அச்சிடப்பட்டு அழகான பைண்டு செய்யப்பட்டது விலை ரூ. 2—4—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

# நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்

## அத்தியாயம் 3.

ஹிஜ்ரி 9-ம் வருடத்தில் பல்வேறு பகுதிகளி லிருந்து பல மன்னர்களின் தூதுக் குழுகள் மதீனா வந்து மகான் மஹ்மூது நபி (ஸல்) அவர்களுக்கு மரியாதை செலுத்தின. அபிஸீனியா அரசருக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் விசேஷ செய்தி யொன்று அனுப்பி யிருந்தார்கள். அதற்கு அவரிட மிருந்து பின்கண்ட பதில் கிடைத்தது:—"அல்லாஹு தஆலாவுக்கு அனைத்து புகழும் உரியது. வணக்கத்துக்குப் பாத்திமானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்றும் முஹம்மது (ஸல்) அவனது தூதர் என்றும் நான் சாக்ஷி கூறுகிறேன். எனது புதல்வி உம்மு ஹபீபா வைத் தமக்குத் திருமணம் செய்து வைக்குமாறு அல்லாஹ்வின் தூதர் எழுதி யிருக்கிறார்கள். அவர்களது விருப்பத்தை நான் மன மகிழ்ச்சியோடு நிறைவேற்றி, அவளுக்கு ஸ்ரீதனமாக 4000 தங்க நாணயங்களை அளிக்கிறேன்."

இந்த சமயத்தில் இறை தூதர் 'முஹம்மதுர் ரசூலுல்லாஹ்' (முஹம்மது, அல்லாஹ்வின் தூதர்) என்ற எழுத்துக்கள் பொறிக்கப் பட்ட முத்திரை யொன்று செய்தார்கள். இஸ்லாத்தில் அழைத்த அனேக அரசர்களுக்கு அண்ணல் (நபி) எழுதிய கடிதங்களுக்கு முத்திரை யிடுவதற்கு இது உபயோகிக்கப் பெற்றது. முத்திரை யிட்ட முதற் கடிதத்தை முஹம்மது (ஸல்) யமன் ராஜப் பிரதிநிதி பதான் என்பவர் மூலம் பாரசீக (ஈரான்) மன்னர் குஸ்ருவுக்கு அனுப்பப்பெற்றது. அக்கடிதத்தைக் கிழித்தெறிந்ததோடு புனித நபிக்கு புத்திபுகட்டுமாறு அல்லது அண்ணல் நபி (ஸல்)யை சிரச் சேதம் செய்து தன்னிடம் தலையை அனுப்பி வைக்குமாறு பதானுக்கு குஸ்ரு உத்திர விட்டான். இந்த விஷயத்தைக் கேட்டறிந்ததும் இறை தூதர் இயம்பினார்கள்: "குஸ்ருவின் சாம்ராஜ்யத்தை அல்லாஹ் இவ்வாறு தான் சிதைத்து சீரழித்து, அவனது மன்றுட்டங்களையும் நிராகரித்து விடுவான்." வெகு சீக்கிரம் குஸ்ருவை அவனது மகன் படுகொலை செய்தான். பதானும் அவரது குடிமக்களும் முஸ்லிமானார்கள்; இறை தூதரும் அவரை அவரது பதவியில் நீடித்து வைத்தார்கள். அண்ணல் நபி (ஸல்)யின் கடிதத்தை ரோமாபுரிச் சக்கரவர்த்தி ஹிரோடியஸ் மிகுந்த மரியாதையுடன் வாங்கி

தமது தலையணைக்கு அடியில் வைத்து, பல பரிசுகளுடன் இறை தூதரிடம் தூதுக் குழு வொன்றை அனுப்பி வைத்தார். மற்றுமிரு மன்னர்களும் தம்மிச்சையாகவே புனித நபியைக் காணச் சென்று இஸ்லாத்தைத் தழுவினர். குணக் குன்றாகவும் கருணைக் கடலாகவும் பொறுமை பொக்கிஷமாகவும் இருந்ததோடு வாக்கு வன்மையையும் வள்ளல் நபி (ஸல்) பெற்றிருந்ததே இம் மகத்தான வெற்றிக்குக் காரணமாகும். வல்லோனின் வஹீயின் வன்மையைப் பெற்றிருந்த வள்ளல் நபி (ஸல்)யின் வார்த்தைகள், அரேபியர்களின் சிந்தனையைக் கிளறி, மனத்தைக் கவர்ந்து, பலர் வாயிலாகத் தூரப் பகுதிகளுக்கும் பரவின. அரேபியர்களுக்கும் அவர்கள் மூலமாக அவனியோர்க்கும் அண்ணல் அஹ்மது நபி (ஸல்) அருளிய வேத கிரந்தம் குர்ஆன் ஷரீப் சிறந்த வாக்குறுதிகள் கொண்டது—வையத்தோரின் வாழ்வை ஒழுங்கு படுத்தும் ஒப்பற்ற அந்த ஒழுக்க நூல் அதனைப் பற்றுவோர்க்குச் சிறிதும் சிரமம் அளிக்காமல் பெரும் சன்மானங்களை அறிவித்தது.

மக்கமா நகரிலும் மதீனாவிலும் ஆதிக்கத்தை ஏற்படுத்திய அதே சமயத்தில் அண்டை நாடுகளில் தோட்டி முதல் தொண்டைமான் வரை புரட்சியைத் தோற்றுவிப்பதற்கு முயற்சி செய்து அதில் அண்ணல் நபி (ஸல்) வெற்றியும் பெற்றார்கள். திமிஷ்கிற்குச் சமீபத்திலுள்ள பஸ்ராவின் கவர்னரிடம் அனுப்பி வைக்கப் பெற்ற தூதுவர் கைது செய்யப் பெற்றார். கிரேக்க சக்கரவர்த்தி ஹிராகிளியஸுக்குக் கப்பம் கட்டிய கிறிஸ்தவ அரபு கோத்திரத்தின் அமீர் ஷர்ஹீல் என்பவனால் அத்தூதுவர் கொலை செய்யப்பட்டார். இப் பழிக்குப் பரிகாரம் தேடும் பொருட்டு மூவாயிரம் பேர் உடனே போர்க்கோலம் பூண்டனர். மிகவும் உயர்ந்தவனான அல்லாஹ்வின் பாதையில் வீரதீரத்துடன் அறப்போர் நிகழ்த்துமாறு அந்த வீரர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அறிவுரை பகர்ந்தார்கள். வாளேந்தி வஞ்சமர் புரிந்து வாகை மாலை சூடுவோர்க்கு இவ்வுலகில் நற்பதவி உண்டென்றும் போர்க்களத்தில் கொலை யுண்டு உயிர் துறப்பவர்க்கும் மறுவுலகில் நற்பதவி உண்டென்றும் அவர்கள் அறிவித்தார்கள். அதே சமத்தில் அல்லாஹ்வின் தூதர் அருளிய அறிவுரை இது தான்: "எனக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிக்குப் பழிவாங்கும் போது, துறவறம் மேற் கொண்ட தூயவர்களுக்கும் மேன்மையுள்ளம் படைத்த மெல்லியலார்க்கும் பால் குடிக்கும் பச்சிளம் பாலர்களுக்கும் வயது சென்ற வயோதிகர்களுக்கும் துன்ப மிழைக்காதீர்கள். உங்களை எதிர்த்து நிற்காத பிரஜைகளின் இல்லங்களை இடித்துத் தகர்த்து விடாதீர்கள்; அவர்களது ஜீவனோபாயத்துக்கான சாதனங்களை சீரழித்து விடாதீர்கள். பழமரங்களுக்கும் பனைமரங்களுக்கும் பழுது விளைவிக்காதீர்கள்."

அரபு துணைப் படையும் சேர்த்து கிரேக்க சைனியத்தில் சுமார் ஒரு லட்சம் பேர் இருந்தனர். எனவே, எண்ணிலடங்கா எதிரிகளின் முதல் தாக்குதலில் மூன்று முக்கிய தளபதிகளை முஸ்லிம்கள் இழந்தனர். முஹம்மது (ஸல்) அவர்களால் முறையே நியமிக்கப் பெற்ற ஜைது, ஜாபர், அப்துல்லா என்ற அம்மூன்று முக்கியஸ்தர்களும் முழு மூச்சுடன் மும்முரமாக முஸ்லிம்களின் எதிரிகளை எதிர்த்துச் சமர் செய்து வீர மரணமெய்தினர். முன்னணியில் நின்று மூர்க்கமாகப் போரிட்டு ஜைது இறந்தார், ஜாபரின் வீரமரணம் போற்றத் தகுந்தது. வலக்கரம் துண்டிக்கப்பட்டதும் இஸ்லாத்தின் இளம்பிறைக் கொடியை இடது கையில் தாங்கிப் பிடித்தார் அவர்; அந்தகரமும் இழந்து விட்ட பிறகு இரத்தம் வடிந்தொழுகும் பிண்டத்தால் புனிதக் கொடியை இறுக்கத் தழுவிக் கொண்டார். ஐம்பது காயங்கள் பட்ட பிறகு தான் அக்கொடி அவரது பிடியி லிருந்து நழுவி விழுந்தது.

மூன்றாவதாக தளபதி பதவி யேற்றுக் கொண்ட அப்துல்லாவின் வீரக்குரல் பின் வருமாறு எதிரொலித்தது: "முஸ்லிம்களே! முன்னேறுங்கள். வெற்றி அல்லது வீர சுவர்க்கம் நமதே" கிரேக்கனொருவனின் ஈட்டி பாய்ந்து, அவர் அமர்க்களத்தில் மரணமெய்தினார். அவரது கரத்தி லிருந்து நழுவிய இஸ்லாமியக் கொடியை நம்முஸ்லிம் காலித் தாங்கிப் பிடித்துக் கொண்டார். வீர தீரத்துக்குப் பெயர் பெற்ற இந்த அஞ்சா நெஞ்சர் ஒன்பது வாட்களை ஒடித்தெறிந்து ஒப்பற்ற வகையில் போர் புரிந்தார். எண்ணிக்கையில் அதிக மிருந்தும் கிறிஸ்தவப் படை முறியடிக்கப்பட்டது. முஸ்லிம்கள் வெற்றி முரசு கொட்டினர். திறமையும் தீரமும் காட்டிப் போற்றத் தகுந்த முறையில் போரிட்டு, இந்த வெற்றிக்கு மூல காரணமாக விருந்த காலித் பின் வலீதுக்கு "ஸைபுல்லாஹ்" (அல்லாஹ்வின் வாள்) என்ற கௌரவ விருது வழங்கப் பெற்றது.

இஸ்லாத்தின் எதிரிகளுக்கு உதவி அளித்து, முஸ்லிம்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு விரோதமாக குரைஷிக் குப்பார்கள் நடந்துகொண்டிருந்தனர். ஆதலால், அவர்களை அடக்கியொடுக்குவது அவசியமாயிற்று. தகுந்த ஆயத்தங்களுக்குப் பிறகு பதினாயிரம் படைவீரர்களுடன் மதீனாவிலிருந்து மகான் மஹ்மூது நபி (ஸல்) புறப்பட்டார்கள். தனிநபரொருவரின் தகாத சூழ்ச்சி காரணமாக வெற்றிக்குத் தடை ஏற்படும் போலிருந்தது. மக்கா வாசிகளுக்குச் செய்தியனுப்பும் பொருட்டு எழுதிய கடிதத்தில் ஹலல் (Halel) என்பவர் அவர்களை அணுகவிருக்கும் அபாயம் பற்றி எச்சரித்திருந்தார். இச்செய்தி மக்கா வாசிகளுக்குக் கிடைக்கு முன்பு விஷயமுணர்ந்துகொண்ட ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அந்த நயவஞ்சகரின் வேலைக்காரி ஸாரபை துரத்திச்

18052

சென்று இடைமறித்தபோது, தன்னிடம் கடிதமெதுவும் இல்லை யென அவள் தெரிவித்தாள். அவளைச் சோதனையிட்ட போதும் கடிதமொன்றும் கிடைக்கவில்லை. ஏமாற்றம் ஏற்பட்டதால் ஆத்திரமடைந்த அஸதுல்லாஹ் (அல்லாஹ்வின் சிங்கம்) அலி (ரலி) வாளையுருவி அவளது தலைக்கு நேராக அதைச் சுழற்றினார்கள். பீதியுற்ற அந்த வேலைக்காரி தனது நீண்ட கூந்தலை அவிழ்த்து விட்டபோது, அதனுள்ளிருந்து விழுந்த கடிதத்தில் பின்வரும் வார்த்தைகள் காணப்பட்டன: மக்கா வாசிகளுக்கு பத்தனின் மகன் ஹலல் எழுதியது: "சௌக்கியம். உங்களைத் தாக்குவதற்கு அல்லாஹ்வின் தூதர் ஆயத்தம் செய்து வருகிறார்கள். ஆகவே, ஆயுத பாணிகளாகுங்கள்."

முஹம்மது (ஸல்) தலைமையில் முஸ்லிம்களின் நடமாட்டங்கள் மிகத் துரிதமாகவும் இரகசியமாகவும் இருந்தமையால் மக்காவாசிகள் எதிர்பாராத வேளை, எண்ணிப் பார்த்திராத வகையில் மக்கமா நகரை முஸ்லிம்கள் சமீபித்து விட்டார்கள். குரைஷியர் சரணடைந்தனர். அல்கஸ்வா என்னும் பிரசித்திப் பெற்ற ஒட்டகத்தின் மீது ஒய்யாரமாக வீற்றிருந்து மக்கமா நகருள் மகான் நபி (ஸல்) பிரவேசித்தார்கள். கஅபாஷரீபிலுள்ள கற்சிலைகளை-விக்கிரஹங்களை-உடைத்தெறியும் வேலையில் புனித நபி (ஸல்) ஈடுபட்டு, லாஇலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் "அல்லாஹ்வைத் தவிர வணங்கத்தகுந்த வேறு நாயன் இல்லை. முஹம்மது (ஸல்) அவனது தூதர்" என்ற தாரக மந்திரத்தை-திருகலிமாவை-பிரகடனம் செய்தார்கள். பின்னர், வனாந்தரத்தில் வாடி வதங்கிய அன்னை ஹாஜிரா (அலை) அவர்களுக்கு அமரர் ஜிப்ரயீல் (அலை) காட்டிச் சென்ற ஜம்ஜம் கிணற்றில் தாகசாந்தி செய்து விட்டு, குர்ஆன் ஷரீபின் 48-வது ஸூராவை அங்கு குழுமியிருந்தோர்க்கு ஓதிக்காட்டினார்கள். முதல் தடவையாக முஅத்தின் 'அதான்' சொல்வதைக் கேட்டதும் உடைத்தெறியப்பட்ட விக்கிரகங்களின் பாகங்கள் அகற்றப்பட்டதும் திரளான மக்கள் நெருங்கி வந்ததும் அவர்களை விழித்து அண்ணல் நபி (ஸல்) வினவியதாவது: "என்னிடம் என்ன எதிர் பார்க்கிறீர்கள்?" ஆயிரக் கணக்கான மக்களின் அபயக் குரல் இதுதான். "தவறிழைத்த தனயனுக்கு தந்தை தஞ்சமளிப்பது போல எங்களை நடத்த வேண்டுமென நாங்கள் வேண்டிக் கொள்கிறோம்." அவர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அளித்த ஆசீர்வாதம் இதுதான்: "செல்லுங்கள்; கௌரவமாகச் செல்லுங்கள். அல்லாஹ்வின் அனுக்கிரகம் உங்களுக்கு உண்டாவதாக".

விருப்பத்துடன் பூஜிக்கப்பெற்ற விக்கிரகங்கள் உடைத்தெறியப் பட்டதைக் கண்டு ஆத்திரமும் ஆவேசமும் அடைந்த ஹவா

ஸின், குரைஷிக் கோத்திரத்தார்கள் அபலாக் தலைமையில் போர்க் கோலம் தாங்கி, மக்காவுக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள ஹூனைன் பள்ளத்தாக்கில் அரண் அமைத்துக் கொண்டனர். அண்மையில் இஸ்லாத்தைத் தழுவிய இரண்டாயிரம் மக்காவாசிகள் உள்பட பன்னிரண்டாயிரம் வீரர்கள் வெகு சுலபத்தில் குறைந்த படை பலமுள்ள எதிரிகளைத் தோற்கடித்து விடக்கூடிய நிலையிலிருந்தார்கள். எனினும், எதிர் பாராத விதமாக எறியப் பெற்ற விஷ அம்புகளைக் கண்டு கலங்கி முஸ்லிம்கள் தலைதெறிக்க ஓடமுற்பட்டனர். அமர்க்களத்தின் மத்தியில் புகுந்து இறை தூதர் (ஸல்) தைரிய மூட்டி உற்சாகமும் ஊக்கமும் அளித்து முஸ்லிம்களின் ஓட்டத்தைத் தடைப்படுத்தினார்கள். இறுதியில், எதிரிகள் தோற்றனர். துரத்தி விரட்டி யடிக்கப்பெற்ற ஹவாஸின்கள் சரணடைந்தனர். இஸ்லாத்தைத் தழுவியதன் மூலம் தம் மக்களுக்கு அபலாக் முன்மாதிரியாகத் திகழ்ந்தார். ஆறாயிரம் கைதிகளும் இருபத்து நாலாயிரம் குதிரைகளும் நாலாயிரம் மொஹராக்களும் அதே அளவுள்ள வெள்ளி நாணயங்களும் முஸ்லிம்கள் வசமாயின. கொள்ளைப் பொருள்கள் ('கனீமா') பங்குபோடப்பெற்று வினியோகமாக விருக்கும் தருணத்தில் தோற்றோரின் பிரதிநிதிகள் வந்து அழுது புலம்பி அநேக குடும்பங்களை நாசத்துக்குள்ளாக்காமலிருக்க நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களது அழுகையும் அபயக்குரலும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அனுதாபத்தைக் கவர்ந்தன. முஸ்லிம் வீரர்களை விளித்து இறைதூதர் (ஸல்) இயம்பியதாவது: "முஸ்லிம்களே! மனம் திரும்பி மன்றாட்டத்துடன் உங்களிடம் உங்கள் சகோதரர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களது தந்தை, தாய், குழந்தைகளுக்குச் சுதந்திரம் அளிக்குமாறும் அவர்களது சொத்து சுகங்களை அவர்களிடம் திருப்பி அளித்து விடுமாறும் என்னை அவர்கள் வேண்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது வேண்டுகோளை என்னால் நிராகரிக்க முடியவில்லை. உங்களது அங்கீகாரம் எனக்கு உள்ள பூர்வமான உவகை அளிக்கும். ஆனால், அதனால் பிரதிகூலம் விளைகிறது என்று எவராவது எண்ணுவாராயின், அவர் பேசட்டும்; அடுத்த போரில் இதைவிட ஏராளமான கொள்ளைப் பொருள்களை அல்லாஹ் அளிக்கும் போது அவருக்கு நஷ்டஈடு தருவதாக நான் வாக்குறுதியளிக்கிறேன்"

அல்லாஹ் தூதர் (ஸல்) விடுத்த வேண்டுகோளைக் கேட்டதும் எவரும் முணு முணுக்கவில்லை; முகமலர்ச்சியோடு, முழு மனதோடு சபையோர் சம்மதம் தெரிவித்தனர். கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பெற்றனர்; அவர்களது உடைமைகளும் உரியவரிடம் ஒப்பு

விக்கப் பெற்றன. பலாத்காரத்துக்கும் பழிவாங்குதலுக்கும் பதிலா கச் சமாதானமும் சகிப்புத்தன்மையும் நிலைபெற்றன.

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஏராளமான அரபு அரசர்களில் யமன் இளவரசர்முஸைலமாவும் ஒருவர். பேராசை கொண்ட இந்த நயவஞ்சகர் தம் ராஜ்யம் சென்றடைந்ததும் முஹம்மது (ஸல்) அவர்களது அபார வெற்றியைக் கண்டு பொறாமை கொண்டு, அபார அறிவும் அரிய சாதனைகளும் அல்லாஹ்வின் அருள்பெற்ற அடியா ராவதற்கு அத்தியாவசியம் என்பதை எள்ளளவும் எண்ணாமல் மூர்தத் ஆகி முரண்டு பிடித்தார். தானும் இறைதூதரென்று அவர் பறை சாற்றினார். உத்தம நபி (ஸல்) அவர்களுக்கு அவர் எழுதிய கடிதம் பின்வரும் தோரணையில் இருந்தது.

"அல்லாஹ்வின் தூதர் முஹம்மதுக்கு அல்லாஹ்வின் தூதர் முஸைலமா வரைவது: உலகினொருபாதி எனக்குச் சொந்தமானதாக இருக்கட்டும்; மற்றொரு பாதி உமக்கு உரியதாக இருக்கட்டும்"

இதற்கு இறைதூதர் (ஸல்) அனுப்பிய பதில் வருமாறு: பொய்யன் முஸைலமாவுக்கு அல்லாஹ்வின் தூதர் முஹம்மது வரைவது: இறைவனுக்குச் சொந்தமானது பூமி. அதன் வாரிசுரிமையை அவன் நாடியவர்க்கு நல்குவான்.

ஹிஜ்ரி 10ம் ஆண்டில் இஸ்லாமியப் பிரசாரம் செய்வதற்காக யமனுக்கு ஹஸ்ரத் அலி (ரலி) அனுப்பிவைக்கப் பெற்றார்கள். ஒரே தினத்தில் ஹமதான் கோத்திரத்தார் அனைவரும் முஸ்லிம் களாயினர். அவர்களது உன்னத உதாரணத்தைத் தொடர்ந்து அந்த மாகாணமக்கள் அனைவரும்—நஸ்ரானிகள் நீங்கலாக—இஸ்லாத் தைத் தழுவினார்கள். கிறிஸ்தவர்களான இந்த நஸ்ரானிகள் கப்பம் கட்டுவதற்குச் சம்மதித்தனர்.

அவனியில் அந்தகாரத்தையும் அறியாமையையும் அகற்றி அறி வுச்சுடர் அளிப்பதற்காக அவதரித்த அண்ணல் அஹ்மது நபி(ஸல்) அவர்களின் ஜீவிய காலத்திலேயே-மறுவருடம் மண்ணுலகைவிட்டு மறுவுலகிற்கு அவர்கள் சென்றார்கள்—அரேபியா முழுவதும் இஸ் லாம் நிலைபெற்று, விக்கிரக ஆராதனை அழிந்தொழிந்தது. வாளேந்தி வாகைமாலை சூடியவராகவும் சிறப்புப்பெற்ற சீர்திருத்தவாதி யாகவும் சீலர் முஹம்மது (ஸல்) திகழ்ந்ததோடு அவர்கள் போதித்த மதம் உண்மைக்கு உறைவிடமாகவும் தூய்மையின் தூணாகவும் அன்பின் அரணாகவும் அமைதியின் அணிகலனாகவும் துலங்கியதே இம்மகத்தான வெற்றியின் இரகசியமாகும். தீர விசாரித்து தீர்ப்பு வழங்கும்—பழிவாங்கும் பழக்கத்தைப் பாதாளத்தில் புதைத்து விட்ட அவர்களது சட்டதிட்டங்கள், நாட்டவரின் கண் மூடித்தன

மான, காட்டுமிராண்டித்தன்மையுள்ள போக்கிற்குக் கடிவாளமிட்டு கண்ணியவான்களாக அவர்களை மாற்றியது. சண்டை சச்சரவுகளி லீடுபட்டு சக்திகளையும் சாதனங்களையும் வீண் விரயமாக்கிவந்த வீணர்களான அரேபியர் சன்மார்க்கத்தின்பால் திரும்பியதும் சமாதானப் பிரியர்களாகவும் சகிப்புத்தன்மை படைத்த வீரர்களாகவும் சட்டெனமாறி விட்டார்களென்றால் இஸ்லாமும் இறை தூதரும் அவர்களிடையே பெற்றிருந்த செல்வாக்கை நன்கு உணர்ந்து கொள்ளலாம். அரேபியர்களின் மதமாற்றமும் மனமாறுதலும் உள்ளத்திலிருந்து உதயமானவையே யன்றி உதட்டிலிருந்து உதிர்ந்தவை அல்ல. மின்சார சக்திபோல தூண்டி விடப்பெற்ற அவர்களது மத உணர்ச்சிகள் ஒரே திசையில் திரும்பின: வல்லோனின் வழியில் வாளேந்தி வாகை சூடுவது அல்லது ஏகத்துவத்தை எடுத்தியம்புவதில் ஏற்ற மிகு மரணத்தைத் தழுவுவது என்ற ஒரே நோக்கத்தில் அவர்கள் காரிய மாற்றத் துவங்கினர்.

அரேபியா முழுவதும் அருவருக்கத்தக்க விக்கிரக ஆராதனையும் உருவ வணக்கமும் அழிந்தொழிந்து “லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்” என்ற இஸ்லாமியத்தாரக மந்திரத்தை—சுவனத்தின் திறவுகோலை—எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு விட்டனர். எனவே, எம்பெருமானார் முஹம்மது (ஸல்) இப்போது ஸிரியாவின்மீது கண்ணோட்டம் செலுத்தினார்கள். இஸ்லாத்தை இல்லாமல் அழித்தொழிக்கும் நோக்கத்துடன் அரேபியாவை முற்றுகை யிடுவதற்கு ஸிரியாவிலுள்ள கிரேக்க சேனை ஆயத்தம் செய்து வருகிறதென்ற வதந்தி உலவலாயிற்று. தீனுல் இஸ்லாம் என்னும் வித்து விருக்ஷமாகி, பழம் பழுத்துப் பயன் அளிக்கும் தருவாயில் ஏற்பட விருந்த அபாயத்தை அகற்றுவதற்கு உடனடியான நடவடிக்கை அவசியமாயிற்று.

இருபதினாயிரம் காலாட்படையினரும் பதினாயிரம் குதிரைப் படையினரும் ஆயுத மேந்தி ஆயத்தமானார்கள். முஹம்மது (ஸல்) தலைமையில் முஸ்லிம் சைனியம் மதீனாவை விட்டுப் புறப்பட்டது. என்றும் கேட்டிராத இன்னல்களுக்கு இலக்காகி, அவதிக்கு ஆளாகி கடைசியில் ஸிரியா சென்றடைந்தபோது எதிர்ப்பு எதிர் நோக்கியிருக்கவில்லை. இரண்டொரு கைகலப்புக்களுக்குப் பிறகு சிற்றரசர்கள் அனைவரும் சரணடைந்து சமாதானம் வேண்டி நின்றனர். கப்பம் கட்டுமாறு கட்டளை யிட்ட கருணைக்கடல் காத்த முன்னபி (ஸல்) தோற்றோரின் தொன்மையான மதஉணர்ச்சிகளுக்கு மதிப்பு அளித்தார்கள்; இறை மதத்தை ஏற்குமாறு அவர்களுக்கு அறிவுரை கூறிய போதிலும் அதனை அவர்கள் மீது திணிக்கவில்லை. புர்கான் புகட்டும் புத்திமதியை புனித நபி (ஸல்) புறக்கணிக்காமல், உபதேசத்தை உதாரணத்தின் மூலம் உலகினர்க்கு உணர்த்தினார்கள்.

"(ஆத்மீகத்துறையில்) அந்தர்களாக இருப்போர்க்கு அறிவுறுத்துங்கள்: இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் அறிவு துலங்கப் பெறுவீர்கள்? அவர்கள் கிளர்ச்சிக்காரர்களாக விருந்தால் அவர்களுக்கு அறிவுரை பகரும் பொறுப்புமட்டும் உங்கள்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. அல்லாஹ் அவனது அடியார்களை எவ்வாறு பிரித்தறிவது என்பதை அறிவான்'' என்பது குர்ஆன் ஷரீபின் வாக்கியமன்றோ?

கிறிஸ்தவர்கள் சொற்ப தொகையைக் கப்பம் கட்டுமாறு காத்தி முன்னபி (ஸல்) கட்டளை யிட்டார்கள் அல்லவா? இத்தகைய கருணையும் காருண்ய மிக்க நடத்தையுமே நபிகள் நாயகம்(ஸல்)அவர்களின் வெற்றிக்கு முக்கிய காரணம். மதீனாவுக்கு மகத்தான வெற்றியுடன் மகான் மஹ்மூது நபி(ஸல்)திரும்பியபோது அவர்களிடம் அபயம்கோரியவர்கள் ஒவ்வொருவரும் இறைதூதரின் இனிய சுபாவத்தைப்போற்றிப் புகழ்பாடினர்.

பித்தலாட்டக்காரர், புரட்டர் என்றெல்லாம் எம்பெருமானார் (ஸல்) மீது பழி சுமத்தப்படுகிற தல்லவா? இத்தகைய அநியாயமான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களி லிருந்து அவர்களைக் கௌரவமாக விடுதலை செய்யக்கூடிய சம்பவமொன்று இச்சமயத்தில் நிகழ்ந்தது. அல்லாஹ்வின் தூதருடைய அறுபத்தோராவது வயதில் பிறந்த, அவர்களது ஒரே மகன் மண்ணுலகிலிருந்து மறுவுலகிற்குச் சென்றார். தனயனையிழந்து தவித்தார் தந்தை. மகனின் மரணம் சம்பவித்த அதே நேரத்தில் சூரிய கிரணம் ஏற்பட்டது. இளைஞரின் மரணத்துக்கும் இயற்கை நிகழ்ச்சிக்கும் சம்பந்தம் கற்பித்து, வானம் கூட வள்ளல் நபி (ஸல்) யின் துன்பத்தில் பங்கு கொண்டது என்ற மூடநம்பிக்கை பாமர மக்களிடையே பரவலாயிற்று. முகஸ்துதி கண்டு முகமலர்ச்சி கொள்ளாமல், மூட நம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க நினைத்து, முஹம்மது (ஸல்) மக்களை ஒன்றுதிரட்டிக் கூறியதாவது: " சகபிரஜைகளே! சூரியனும் நக்ஷத்திரங்களும் அல்லாஹ்வின் படைப்புகள். இறந்துவிடும் தன்மையுள்ள இன்ஸானின் பிறப்பு அல்லது இறப்பை அறிவிப்பதற்காக அவை மறைவதுமில்லை அல்லது மறைக்கப்படுவதுமில்லை."

இக்காலம் முதற்கொண்டு, ஒப்புயர் வற்ற ஒழுக்க நெறியினைப் போதிக்கும் குர்ஆன் ஷரீபுக்கு மரியாதை செலுத்துவதற்காக மதீனாவுக்கு வந்தவர்களனைவரின் மரியாதை கீழ்ப்படிதல் ஆகியவற்றைப் பெறுவதில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலம் செலவழிந்து வந்தது. உலகின் சரிபாதியைப் பிற்காலத்தில் வியாபிக்கக்கூடிய இஸ்லாமிய சமூகத்தின் சாம்ராஜ்யத்தின் சட்ட திட்டங்களையும் கொள்கை, கோட்பாடுகளையும் நிர்ணயிப்பதிலும் அவர்கள் கவனம்

செலுத்தினார்கள். மார்க்கத்தின் வெளியரங்கமான சடங்கு, சம்பிர தாயங்களுக்கு மதிப்பு அளிக்குமாறு மக்களைத் தூண்டும் வகையில் இவ்விஷயத்தில் உன்னத உதாரணத்தின் மூலம் முன்மாதிரியை ஏற்படுத்தும் வகையில், மக்கா ஷரீபுக்கு ஹஜ்ஜுச் செய்வதற்குத் தாம் உத்தேசித்திருப்பதாகப் பறை யறிவித்தார்கள். அல்லாஹ்வின் அருளால் அந்த ஹஜ்ஜுதான் தமது கடைசி ஹஜ்ஜு என்பதை அறிந்து கொண்டு, அந்நகரில் முன் கண்டும் கேட்டு மிராதவகையில் மிக கம்பீரமான முறையில் அப்புனிதக் கடமையை நிறைவேற்று வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். கஅபா ஷரீபுக்குள் பிரவே சித்து அதனைச் சுற்றி ஏழுமுறை தவாபு செய்தபின் (வலம் வந்த பிறகு) ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் தொங்கோட்டம் ஓடினார் கள். இறுதியில் அனேக அடிமைகளை விடுதலை செய்தார்கள்.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் கடைசியானதான ஹஜ்ஜை நிறைவேற்றி விட்டு மதீனா திரும்பிய மகான் மஹ்மூது நபி (ஸல்) அவர்களை மரணம் எதிர்நோக்கி யிருந்தது வெகுசீக்கிரம் ஜுரத்தால் அவர்கள் பீடிக்கப் பெற்றார்கள். நேசத்துக்கும் பாசத் துக்கும் பாத்திரமான மனைவி ஆயிஷா (ரலி) வின் இல்லத்தில் இறுதி நாட்களைக் கழிப்பதென இறுதி இரசூல் (ஸல்) தீர்மானித் தார்கள். காய்ச்சலால் கஷ்டப்பட்ட காலத்திலும் கடமையுணர்ச்சி யோடு காரியங்களை நிறைவேற்றினார்கள். ஸிரியாவுக்கு மற்றொரு படை அனுப்புவதற்கான விவரங்களைத்தாமே தயாரித்து, இஸ்லாத் தின் கொடியை ஆசீர்வதித்து, அதனை உஸாமா பின் ஜைது பொறுப்பில் ஒப்புவித்தார்கள்.

மரணத்துக்கு மூன்று தினங்கள் வரையில் இஸ்லாத்தின் இரண்டாவது கடமையான தொழுகையை ஜமாஅத்தோடு சேர்ந்து நிறைவேற்றி வந்தார்கள். ஸஹாபாக்களின் தோள்களில் சாய்ந்து மஸ்ஜிதுக்கு வருமளவுக்கு உடல்நிலை மோசமான பிறகு தான் இமாமத் செய்யுமாறு ஆருயிர் நண்பர் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களை அண்ணல் நபி (ஸல்) ஆக்ஞாபித்தார்கள். இறை வனின் இல்லத்துக்கு இறுதியாக வந்திருந்தபோது, தொழுகை முடிந்ததும் ஹாலிரீன்களை (பிரசன்னமாகி யிருந்தோரை) அழைத்து அருமைப் பிரசங்கம் நிகழ்த்தினார்கள். அவர்கள் கூறினார்கள்:- "மனிதர்களே! சகோதரர்களே! உங்களில் எவரையும் நான் அநியாய மாக அடித்திருந்தால் பழிக்குப்பழி வாங்கிக்கொள்வதற்காக எனது தோள்களை அவர் வசம் ஒப்புவிக்கிறேன். நல்ல முஸ்லிம் எவருடைய நற்பெயருக்காவது நான் நாசம் விளைவித்திருக்கிறேனா? இந்த மஜ் லிஸ் முன்பு அவர் எனது தவறை எடுத்துரைக்கட்டும். எவரது சாமான்களாவது அபகரித்துக் கொள்ளப்பட்டனவா? என்னிட முள்ள அற்ப சொற்ப ஆஸ்தியைக் கொண்டு அக்கடனை நான் திருப்

பிச் செலுத்திவிடுகிறேன்.” உணர்ச்சியும் உருக்கமும் மிகுந்த இப்பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் எழுந்திருந்து தமக்கு மூன்று திர்ஹம்கள் சேரவேண்டும் எனத் தெரிவித்தார். உடனே, அவரது கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டு நபிகள் நாயகம் (ஸல்) நவின்றார்கள்:- மறுமையில் வேதனைப்படுவதைவிட இம்மையில் நான் வெட்கத்துக் குள்ளாவதை விரும்புகிறேன். அடிக்கடிவந்து அருகில் அமர்ந்து அழும் அருமை மகள் பாத்திமா (ரலி) வை விளித்து அவர்கள் சொன்னார்கள்:—“மகளே! நீ அழுது கொண்டிருப்பது எதற்காக? எனது சிறந்த நண்பனான அல்லாஹ்விடம் நான் செல்கிறேன்” பிறகு, தமது அடிமைகளுக்கு உரிமை அளித்து விடுதலை செய்தார்கள். தமது படுக்கையைச் சுற்றி உட்கார்ந்து கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளித்த இதர உறவினர்களுக்கு உம்மி நபி (ஸல்) உபதேசித்த மொழிகள் வருமாறு: “எனது ஜனாஸாவைக் குளிப்பாட்டி கபனிட்டபின், இப்போது நான் இருக்கும் இடத்துக்கு அடியில் குழிதோண்டிப் புதைத்து விடுங்கள். இக்கடமைகளை நிறைவேற்றியதும் நீங்கள் பிரிந்து சென்று விடுங்கள். அழுகைக் குரல் அல்லது புலம்பல் ஓசை எனது அமைதியைச் சீர்குலைத்து விடக்கூடாது என்பதுதான் எனது உண்மையான ஆசையும் ஆவலுமாகும்”

ஹிஜ்ரி பதினோராவது ஆண்டின் முதல் தினம், ரபீயுல் அவ்வல் மாதம் பன்னிரண்டாந் தேதியன்று இறுதி இரசூல் (ஸல்) இறைவனடி சேர்ந்தார்கள். (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்) ஆங்கில பஞ்சாங்க முறைப்படி இதற்குச் சரியான தேதி கி-பி. 632ம் ஆண்டு ஜூன் மாதம் எட்டாந்தேதி ஆகும். அப்போது அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அறுபத்துமூன்று வயது; நாற்பதாவது வயதில் நாயனிடமிருந்து நபிப்பட்டம் பெற்ற அவர்கள் இருபத்துமூன்று வருடகாலத்துக்குள் இஷாஅத்செய்து இஸ்லாத்தை இவ்வையத்தில் நிலைநிறுத்தி விட்டார்கள். மதீனாவில் மகான் மஹ்மூது நபி (ஸல்) அவர்களின் ஜனாஸா அடக்கம் செய்யப்பெற்றது. பாருலகின் பல்வேறு பாகங்களிலுமிருந்து பல்லாயிரக்கணக்கானவர்கள் வருடந்தோறும் வந்து அவர்களது ரௌலா ஷரீபை ஜியாரத் செய்கின்றார்கள். (தொடரும்.)

187052

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

அலி றலியல்லாஹு அன்ஹு
அவர்களின் மகனுர்

# முஹம்மது ஹனீபா
# யுத்த சரித்திரம்

இதில் ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா அவர்களின் தாயாராகிய ஹனீபா பீவியுடன் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் யுத்தஞ்செய்து ஜெயித்து, அவர்களை நிகாஹ் செய்துவிட்டுப் போனதும், பிறகு ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா பிறந்து தாயிடம் வளர்ந்து தமது பிதாவாகிய அலி றலியல்லாஹு அன்ஹுவைத் தேடிச்சென்று பிதாவென்று அறியாமல் யுத்தம் புரிந்ததும் பிறகு ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா அவர்கள் பூத தேவுகளுடன் யுத்தம் புரிந்து பீவி ஸைனுல் அறபை விவாகம் செய்ததும், ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களை எஸிது என்பவன் ஷஹீது செய்து, ஹஸரத் இமாம் ஸைனுல் ஆபிதீன் அவர்களையும் ஹஸ்ரத் கபி காயகம் அவர்களின் வீட்டாரையும் சிறையிட்ட விஷயமாகத் தாங்கள் புறப்பட்டு போகும்போது உமர் அலி, தாலிப் அலி, ஆகில் அலி, மூஸிப்காகான், இப்ருஹீம் உஷர்த்து, தோஹான் மோஹான் முதலிய பிரக்யாதி பெற்ற வீரர்களோடு மதீனமா நகரஞ் சென்று உத்பா வலீது என்பவர்களுடனும், மர்வானுடனும் எஸீதுடனும் பல ஊர்களில் பலவிதமாய் மகா வீரியத்துடன் அதிசயிக்கத் தக்க விதமாய் யுத்தஞ் செய்து எஸீதுடைய படைகளை முறிய அடித்தும் ஜெயித்தும், மர்வானுடைய மூக்கையும், காதையும் அறுத்தும் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுடைய பழிக்கு பதில் பழி வாங்கி சிறையை மீட்டியதும், ஹஸரத் ஸைனுல் ஆபிதீன் அவர்களைப் பட்டத்தில் உட்கார வைத்ததும், எல்லா அரசாங்கத்தையும் தங்களுக்குள்ளடக்கி ஆண்டதுமான எல்லா விஷயங்களும் மிக அருமையாயும் தெளிவாயும், எழுதப்பட்டிருக்கிறது.

புதிய பதிப்பு கலிகோ பைண்டு விலை ரூ. 3

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

# தாரீகுல் குலபா

## இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமையாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாமின் ஆரம்பமும், இஸ்லாத்தை நிலை காட்டிய தத்துவங்களும், இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும், இஸ்லாத்தின் சமத்துவங்களும், இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும் ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற் பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 8-பேஜ் சைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ. 1—8—0

ஷை இரண்டாவது பாகம்: இதில் ஹஸரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப்பெற்றது. விலை ரூ. 1—4—0

ஷை மூன்றாம் பாகம்: இது ஹஸரத் உஸ்மான் (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் அலி (ரலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும் ஆக 5-கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியது. விலை ரூ. 1—4—0

ஷை மூன்று பாகமும் சேர்ந்தது ரூ. 3—8—0

---

கிடைக்குமிடம் :—

**ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.